# சுதந்திரத்துக்குப்பின் இந்தியா தவருனவழியில் சென்றுள்ளதாம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 11
இதழ்: 245
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் புரட்டாதி 29 ஷஃபான் 3 புதன்கிழமை [15-10-69]

## காமராஜர் சொல்கிருர்

சென்னை, அக். 14

''சுதந்திரம் கிடைத்ததிலிருந்து. நாடு தவருனவழியில் போய்க்கொண்டிருக்கின்றது இதனை மாற்றுவதற்கு தமிழ்நாட்டில் ஓர் இயக்கம் ஆரம்பிக்கப் படவேண்டும்'' என்று முன்னுள் காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜ் கூறியிருக்கிருர்.

இந்திய இயக்கம்பற்றி திரு. காமராஜ் விபரம் ஒன்றும் கூறவில்லை. ஆனுல் நாட்டின் மற்றைய பகுதிகளுக்கு முன்மாதிரியாக இது இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்திஞர். வாலிபர்கள் கூட்டமொன்றில்பேசிய திரு. காமராஜ், தவருனவழியில் போய்க்கொண்டிருக்கிருேம் என்று தெரிந்து கொண்டால் அதிகாரத்தில் இருப்பவர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளத்தான் வேண்டும் என்ருர்.

நேற்று முன்தினம் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பேசும்போது திரு. காமராஜ் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியைக் கடுமையாகத் தாக்கிப் பேசிஞர். திரு. சி. சுப்பிரமணியத்தை காங்கிரஸ் கமிட்டியிலிருந்து நீக்கியதாக திரு. நிஜலிங்கப்பாவிடமிருந்து கடிதம்வரு முன்பே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பதற்காக பிரதம மந்திரியும் மற்றவர்களும் சிறு பிள்ளைத்தனமாக நடந்து கொண்டிருக்கிருர்கள் என்று காமராஜ் கண்டித்தார்.

## யாழ். உணவுக் களஞ்சியத்தில்

# ரூ.3 லட்சம் மாமூடைகள் தேங்கிக் கிடக்கின்றன

## நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண உணவுக் களஞ்சிய அறையில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான மாமூடைகள் தேங்கிக்கிடக்கின்றனவாம். இவைகளை உடனடியாக நாட்டின் பல்வேறு பகுதிகற்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரலி குமாஸ்தாக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட யாழ்ப்பாண ஆட்சி மன்ற உறுப்பினரான திரு ஜி ஜி. பொன்னம்பலம் இது சம்பந்தமான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதாக இங்கு உறுதியளித்தார்.

வட பகுதித் துறைமுகங்களுக்கு வருடமொன்றிற்குக் குறைந்தது 15 கப்பல்களையாவது அனுப்புவதற்கான [illegible] யைச் சுமுகமாகத் தீர்க்க முடியுமென்றும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேலோங்கச் செய்ய முடியுமென்றும் குறிப்பிட்டார்

யாழ்ப்பாணத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை பாதுகாப்பதற்கு மேலும் கூடுதலான களஞ்சிய அறைகளை விஸ்தரித்துத் தருமாறு திரு பொன்னம்பளத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது (கா நி)

## பட்டதாரிகளுக்கு இனி பட்டமளிப்பு விழா இல்லை

### தராதரப் பத்திரம் பெற விண்ணப்பிக்க வேண்டும்

கோட்டை, செவ்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தகைமை பெற்ற பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு விழா நடத்தாமலேயே பட்டங்கள் இனிமேல் வழங்கப்படவிருக்கிறது. பரிபாலனசபை தீர்மானித்தபடி இதை இவ்வருடத்திலிருந்து அமுல் நடத்த இருப்பதாக பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் திரு. ஈ. ஓ. ஈ. பெரேரா அறிவித்துள்ளார்.

1968-ம், 1969-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பட்டத் தகைமை இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களை பட்டம் பெறுவதற்கு அக்டோபர் 31-ம் திகதிக்கு முன்னராக பல்கலைக் கழகச் செயலாளருக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

1968-ல் நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழாவில் பட்டம் வழங்கவேண்டியிருந்து, இதுவரை பட்டமளிப்புப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் இப்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும், காலக்கிரமத்தில் அவை அனுப்பிவைக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்துக்கு ஐ. ஜி. பி. விஜயம்!

யாழ்ப்பாணம், புதன்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலரிக் அபயகுணவர்த்தனவும் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் [illegible] இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்ய [illegible] ஆகிய பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பார்வையிடுவார் தொடர்ந்து 18-ம் திகதிவரை யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ்நிலையங்களுக்கும் செல்வர்

திரு அலரிக் அபயகுணவர்த்தன 17ந் திகதி யாழ்ப் [illegible]

## பிரிட்டிஷ் நிபுணர் கருத்து:

# 'ரஷ்யா' புதியசாதனையை ஏற்படுத்தியுள்ளது'

மாஸ்கோ, அக் 14

விண்ணில் பூவுலகை வலம் வந்துகொண்டிருக்கும் ஏழு ரஷ்ய விண்வெளிவீரர்களும் இன்று உடற்பயிற்சி செய்ததுடன், ஒருவருக்கு ஒருவர் வைத்திய பரிசோதனையும் செய்துகொண்டனர்.

இதுவரை செய்யாத மிகப்பெரிய சாதனையை அண்டவெளியில் ரஷ்யா நிகழ்த்தவிருப்பதாக பரவலாகக் கருதப்படுகிறது.

சென்ற சனிக்கிழமையிலிருந்து தினம் ஒரு கலமாக மூன்று நாட்களில் சோயஸ்-6, சோயஸ் 7, சோயஸ் - 8 ஆகிய மூன்று கலங்களை ரஷ்யா அனுப்பி வைத்தது. இந்த மூன்று கலங்களிலும் 7 வீரர்கள் பூமியை வலம்வந்துகொண்டிருககிருர்கள்.

விண்வெளிவீரர்கள் எழுவரும் தேகசுகத்துடன் இருப்பதாகவும் விண்வெளிக்கலங்கள் சரிவர இயங்குவதாகவும் மாஸ்கோ வானெலி அறிவித்தது

### புதிய சாதனை

இதற்கிடையில் லண்டனிலிருந்து பிரிட்டிஷ் விண்வெளி ஆராய்ச்சி நிபுணர் பெர்ஞட் லொவல் ரஷ்யாவின் இந்த விண்வெளிப்பயணம் புதிய சாதனையென்று தெரிவித்திருக்கிருர்

மிகப்பெரிய சாதனை என்றும் திரு பெர்ஞட் வர்ணித்தார்

### பூமியை சுற்றுகிறது

சனிக்கிழமை அனுப்பப்பட்ட 'சோயஸ்-6' கலம்46 தடவைகள் பூமியை சுற்றியிருப்பதாகவும், சோயஸ்-7' 29 தடவை பூமியை சுற்றியதாகவும், 'சோயஸ்-8'13 தடவை பூமியை சுற்றியதாகவும் மாஸ்கோ வானெலி தகவல் வெளியிட்டது

## தந்திக்கம்பி களவு

சங்கானை, செவ்வாய்

வட்டுக்கோட்டைச்சந்திக்கும் அராலிக்கும்இடையே உள்ள இடத்தில் தந்திக் கம்பிகள் களவாடப்பட்டுள்ளதாக தபால்-தந்தி சேவைப் பகுதியினர் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

......

## காந்தி நூற்ருண்டு பேச்சுப்போட்டி

உரும்பராய், செவ்வாய்

கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளுக்கான காந்தி நூற்ருண்டுவிழாப் பேச்சுப் போட்டிகள் வரும் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

தமிழ், ஆங்கிலம் என இரு [illegible]

## "கலாச்சார மறுமலர்ச்சி தான் இனத்தின் விழிப்புணர்ச்சியாகும்"

### — யாழ். நகர முதல்வர்

யாழ்ப்பாணம், புதன்

''ஒவ்வொரு சுதந்திர பிரசையும் தனது மொழியின் கலை கலாச்சார வளர்ச்சியில் மறுமலர்ச்சி காண்பது அவசியமாகும். கலாச்சார மறுமலர்ச்சிதான் அந்த இனத்திற்கு விழிப்புணர்ச்சியைக் கொடுக்கும்''

யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. சி. நாகராஜா இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் கதம்பக் கலைவிழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் [illegible] இடைக்காடு மகாவித்தியாலயம், அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியன அளித்த நடன, நாடக நிகழ்ச்சிகளும் ஆசிரியர்கள் நடித்த 'ஆத்ம திருப்தி' என்ற நாடகமும் விழாவில் இடம்பெற்றன. (கா.நி.)

## ரூபா 30 லட்சம் செலவில் நூல்நிலையம்

கோட்டை, செவ்வாய்

கொழும்பில் ரூபா 30 லட்சம் செலவில் நவீன நூல் நிலையமொன்று அமைக்கப் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...தனை பல்கலைக்கழக உபவேந்தர் திரு. ஈ. ஓ. ஈ. பெரேரா அறிவித்துள்ளார்.

1968-ம், 1969-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பட்டத்தகைமை இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த இலங்கைப் பல்கலைக் கழக மாணப்புப் பத்திரங்களைப் பெறுக் கொள்ளாத மாணவர்கள் இப்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை என்றும், காலக்கிரமத்தில் அவை அனுப்பிவைக்கப்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

...பொன்னம்பலம் இது சம்பந்தமான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதாக இங்கு உறுதியளித்தார்.

வட பகுதித் துறைமுகங்களுக்கு வருடமொன்றிற்குக் குறைந்தது 15 கப்பல்களையாவது அனுப்புவதற்கான நடவடிக்கைகளை தான்மேற்கொள்வதாகவும் திரு ஜி ஜி பொன்னம்பலம் அங்கு வாக்குறுதியளித்தார்

வடபகுதி துறைமுக ரலிகுமாஸ்தாக்கள் கூட்டுறவுச் சங்கத்தின் தேநீர் விருந்து வைபவத்திலேயே திரு ஜி ஜி பொன்னம்பலம் இந்த வாக்குறுதியை அளித்தார்

சங்கத்தலைவர் திரு என் திருச்செல்வம். இவ் வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் காங்கேசன் துறைமுகத்தைஉடனடியாக அபிபிருத்தி செய்வதன் மூலம் வடபகுதி மக்களின் வேலையில்லாப் பிரச்னை

## 1971 முதல் கூட்டுககல்வி இல்லை
## அமைச்சு தீவிர நடவடிக்கை

கோட்டை, செவ்

1971-ம் ஆண்டு இறுதியில் கூட்டுக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அடுத்த மூன்று வருடங்களுக்கிடையில் ஆண்களும், பெண்களும் தனித்தனி பாடசாலைகளில் கற்பதற்கு வசதியாக போதியளவு பாடசாலைகளை நிறுவுவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

சகல அரசாங்க பாடசாலைகளிலும் படிப்படியாக கூட்டுக் கல்வியை ஒழிப்பதற்கு கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரிய கொல்லை தீர்மானித்துள்ளார்.

கூட்டுக்கல்விஇடம்பெறும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கமில்லையெனக் கல்வி அமைச்சுக்குக் கிடைத்த புகார்களைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை துரிதப்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

...யாழ்ப்பாணம், புதன் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அலரிக் அபயகுணவர்த்தனவும் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு டெடிகமவும் இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார்கள்,

திரு பி ஜி டெடிகமஇன்று காலை வருகிறார், இன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, பளை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பார்வையிடுவார் தொடர்ந்து 18-ம் திகதிவரை யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ்நிலையங்களுக்கும் செல்வர்

திரு அலரிக் அபயகுணவர்த்தன 17ந் திகதி யாழ்ப்பாணம் வருகிறார் 18ந்திகதி பொலிஸ் உயர் அதிகாரிகளின் மாநாட்டுக் கூட்டம். திரு அபயகுணவர்த்தன 19ந் திகதி தீவுப்பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வார்

இரகசிய பொலிஸ் சுப்பிரின்டன் திரு செனிவரத்னவும் இவர்களுடன் யாழ்ப்பாணம் வருகின்றார். [கா நி)

...பாடசாலைகளுக்கான காந்தி நூற்றாண்டுவிழாப் பேச்சுப் போட்டிகள் வரும் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

தமிழ், ஆங்கிலம் என இரு பிரிவுகளில் நிகழஇருக்கும் பேச்சுப்போட்டிகளில் ஆண்களும் பெண்களுமாக 55 மாணவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

குறித்த பேச் ப்போட்டிக்குரிய பூர்வாங்க ஒழுங்குகளைக் கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. வே சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

...கொடுக்கும்"

யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. சி. நாகராஜா இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தின் கதம்பக் கலைவிழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ் வைபவத்துக்கு திரு. சி. நாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மேலும் பேசுகையில் ஆசிரிய சங்கங்கள் அரிய தமிழ்க் கலைகளை வளர்க்கப்பாடுபடல்வேண்டுமென்றும், இந்த ரீதியில் வலிகிழக்கு ஆசிரிய சங்கத்தின்முயற்சி வெற்றிகொடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. எம். முத்துலிங்கம் பேசுகையில், பிள்ளைகளின் உள்ளங்களில் பசுமையாகக் கலைஉணர்வு உண்டு எண்ணிஞல் அது என்றும் நிலைத்துநிற்கும் என்று சொன்னர்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி, அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அச்சுவேலி சென். திரேசா,

...இடம்பெற்றன. (கா.நி.)

## ரூபா 30 லட்சம் செலவில் நூல்நிலையம்

கோட்டை, செவ்வாய்

கொழும்பில் ரூபா 30 லட்சம் செலவில் நவீன நூல் நிலையமொன்று அமைக்கப் படவிருக்கிறது. பிரதமர் திரு. டட்லி இதற்கான நிதியை வரும் 30-ம் திகதி ஆரம்பித்துவைப்பார்.

## ரஷ்யா அணுகுண்டு வெடித்தது

மாஸ்கோ, அக் 14

சோவியத்யூனியன் நிலத்துக்கடியிலான அணுசோதனையை இன்று நடத்தியுள்ளது. இதுவரையில் இவ்வித சக்திவாய்ந்த அணுசோதனை நிலத்துக்கடியில் நடத்தப்படவில்லையென அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளார்கள்.

## 2000 ஏக்கரில் முந்திரிகை

கோட்டை, செவ்வாய்

மன்னர் மாவட்டத்திலும் மட்டக்களப்பு மாவட்டத்திலும் 2000 ஏக்கரில் முந்திரிகைசெய்கை இப்போது நடைபெறுகிறது. இதனை விஸ்தரிக்க இப்பே து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## 12 வழக்குகளில் தண்டனை பெற்றவர் மீண்டும் கைது

யாழ்ப்பாணம், புதன்

ஒன்றரை மாதங்களாக நீதிமன்ற பிடியிலிருந்து ஒன்றுக்காகத் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்றுமுன் தினம் வண்ணர்பண்ணையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

கிராமசேவகர் திரு. ரி, சிவபாதசுந்தரமும்பொலிஸ் கான்டபிள் திரு. எம். கார்த்திகேசுவும் சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

சந்தேநபர் ஏற்கனவே 12 வழக்குகளில் தண்டனை பெற்றவர் என்பது கைதானபின்னரே பொலிசாருக்குத் தெரியவந்ததாம்

சந்தேகநபரான குலதுங்கம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபின் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (கா. நி)

## தமிழ்நாடு அமைச்சர்
## ஓ. பி. ராமனுக்கு திருமணம்

சென்னை, அக். 14

தமிழ்நாடு மின்சார அமைச்சர் திரு. ஓ. பி ராமனுக்கும் கல்லூரி மாணவியான செந்தில்வடிவுக்கும் (வயது 19) திருமணம் நடைபெறவுள்ளது.

தமிழக அமைச்சரவையில் திருமண மாகாத அமைச்சர் திரு ஓ. பி ராமன் ஒருவரேதான்.

டிசம்பர்மாதம் 12ம் திகதி மதுரை மாவட்டம் திண்டுக்கலில் இந்தத்திருமணம் நடைபெறும். திரு ஓ பி ராமன் கடந்த பொதுத்தேர்தலில் தற்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கக்கனை தோற்கடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'இந்து ஆலயபரிபாலனசபை மசோதாவைஅமுல்நடத்துக'
### இந்துமாமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

இந்து ஆலய பரிபாலன மசோதாவை அரசாங்கத்தைக்கொண்டுநடைமுறைப் படுத்த இந்துமாமன்றம் உடனே செயலில் இறங்க வேண்டும் என்ற தீர்மானம் இந்துமாமன்ற செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது

இக்கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர்கல்வி அமைச்சில் உள்ள இந்து மகாசபையுடன் கலந்துசகல பாடசாலைகளிலுமுள்ள இந்துசங்கங்களை அகில இலங்கை இந்துமாமன்றத்துடன் இணைக்கச் செய்து தகுந்த பிரசாரங்கள்செய்ய வேண்டும். அத்துடன் கொழும்பு விவேகானந்த சபையுடன் சேர்ந்து சகல பாடசாலைகளையும் தரிசித்துப் பிரசாரங்கள் செய்ய வேண்டும்.

சைவத் தாபனங்கள் இலவச சைவ வகுப்புகள்நடத்த பாடசாலைச் சட்டங்கள்எவ்விததடையுமின்றி பாடசாலை நேரமில்லாத நேரங்களில் வழங்க வித்தியாதிபதி ஒப்பவேண்டும்.

விவேகானந்த சபையின் பரீட்சைக்குழுகொழும்புக்கு வெளியில்செல்லும்பொழுது மாமன்றத்தின் அங்கத்தவர்களும் அவர்களுடன் சென்று மாமன்றத்தைப் பற்றி பிரசாரம் செய்ய வேண்டும்.

இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவையில், இந்துசமய நடவடிக்கைகள் பற்றிய செய்தி அறிக்கை வெளியிடுவதற்கு மாமன்றம் இலங்கை வானெலிக்கு உதவவேண்டும்.

சைவக் கோவில்களிலும், சைவத்தாபனங்களிலும் உள்ளசேவைகளைச் செய்ய சில இடங்களில் வசதியில்லாதிருப்பதால் அவ்விடங்களிலுள்ள இந்துச்சங்கங்கள் சிரமதானக் குழுவை ஏற்படுத்தி சேவைகளை நன்கு செய்ய ஒழுங்குசெய்யவேண்டும்

சிவராத்திரி தினவிழாவை பகிரங்க விடுமுறையாக்குவதுடனன்றி வர்த்தகவிடுமுறையாக்கு மாறும் மன்றம் கேட்டதற்கு அரசாங்கம் இணங்காதபடியால் இந்து ஆலோசனைசபைக்குஇவ்விஷயத்தை எழுதி அதன் சிபார்சைப் பெறவேண்டும்.

இந்து ஆலய பரிபாலன மசோதாவை அரசாங்கத்தை கொண்டு நடைமுறைப்படுத்த ஒரு குழு தெரிவுசெய்யப்பட்டது. இக்குழுவில் பின்வருவோர் அங்கம் வகிக்கின்றனர் திருவாளர்கள் வே தில்லைநாதன், ச சோமசுந்தரம், மு வைரமுத்து, இரா. சபாநாயகம், ஆ. தவத்துரை,

கொழும்பு கோட்டையில் இந்துக்கலாச்சார நிலையம் நிறுவுவதற்குஏழுமாடிகளைக் கொண்ட கட்டிட மாதிரிப் படம் வரைவதாக செயலாளர் கூட்டத்தில் தெரிவித்தார்.

## தேர்தலில் உடுகம போட்டியிடுவார்

கொழும்பு, செவ்வாய்

புரட்சி சதிவழக்கில் விடுதலை செய்யப்பட்டமுன்னுள் இராணுவ தளபதி கேர்ணல் உடுகம அடுத்த பொதுத் தேர்தலல் போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறார்

மாத்தளைத் தொகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சார்பில்தாம் போட்டியிடப் போவதாக மாத்தளையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் அவர் இதனை வெளியிட்டார்

இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகம் சிங்களமக்களின் விரோத சக்தியென்றும், அதனை நடமாடவிடுவது ஆபத்துஎன்றும் அதனை ஒழித்துக்கட்டுவதே தமது முக்கிய நோக்கமென்றும் கேர்ணல் உடுகம இங்குபேசுகையில் குறிப்பிட்டார்.

## 3000 மாணவ ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

கோட்டை, செவ்.

கல்வியமைச்சு 3000 மாணவ ஆசிரியர்களை விரைவில் நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளில் நியமிக்கவிருக்கிறது.

சமீபத்தில் நடைபெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சையொன்றை நடாத்தி மேற்படி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் இவ்வார முடிவுக்குள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவ ஆசிரியர்தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை மாவட்ட ரீதியாக அந்தந்த மாவட்ட கல்வி அதிகாரிகளினுல் நடாத்தப்படும்.

### 'இல்ல நோயாளர் பராமரிப்பு'

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மாணவிகள் 'இல்ல நோயாளர் பராமரிப்பு'ப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று ''நொக்கவுட்'' கேடயத்தைப்பரிசாகப் பெற்றுக் கொண்டனர்.

இரண்டாம் இடத்தை கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையும், இளவாலை கொன்வென்ட் கல்லூரியும் கூட்டாகத் தட்டிக் கொண்டன.

## அகற்றுவிட்டால் சத்தியாக்கிரகம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் கிராமசபைக்குட்பட்ட தேநீர் கடைகளில் தேநீர் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் தகரப் பேணிகள் யாவற்றையும் நீக்கி பித்தளை அல்லது அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்துமாறு சுழிபுரம் முன்னேற்றக் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். தகரப்பேணிகளை அகற்றுது விட்டால், கடை வாசலில் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

### மூன்று அமைச்சர்களுடன் வரும்
## பிரதமரின் விவசாயச் சுற்றுலா நிகழ்ச்சிநிரல் தயாராகி விட்டது
### 3 நாட்கள் வடக்கில் தங்குவர்

யாழ்ப்பாணம், புதன்

பிரதம அமைச்சர் திரு. டட்லி சேனநாயக்கா வடபகுதிக்கு விவசாயச்சுற்றுலா மேற்கொண்டு அடுத்த மாதம் 14-ம்திகதி வருவது நிச்சயப்படுத்தப்பட்டு விட்டது.

16-ம் திகதி வரை மூன்று நாட்கள் சுற்றுலா மேற்கொள்ளும் பிரதம அமைச்சருடன் விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டா காணிநீர்ப்பாசனஅமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா, தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன ஆகிய மூவரும் வருகின்றார்கள்.

பிரதம அமைச்சரின் விவசாயச்சுற்றுலா பற்றிய தற்காலிக நிகழ்ச்சி நிரல் ஒன்று யாழ்ப்பாண அரசாங்க செயலக அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு கடந்த வார இறுதியில் அனுப்பி வைக்கப்பட்டது.

விஸ்வமடு, திருவையாறு, கனகபுரம் வட்டக்கச்சி தைப்பாலிபர் குடியேற்றத்திட்டங்கள், மிருசுவில் பெண்கள் குடியேற்றத்திட்டம், திருநெல்வேலி மகளீர் கிருஷிக பாடசாலை ஆகியவைகளுக்கும் தனிப்பட்ட விவசாயத் தோட்டங்களுக்கும் பிரதமரும் அமைச்சர்களும் முக்கியமாகச்செல்வார்கள்.

இவ் விஜத்தின் போது காங்கேசன்துறைமுக அபிவிருத்தி வேலையை பிரதமர் ஆரம்பித்து வைக்க விருப்பதும்குறிப்பிடத்தக்கதாகும். (கா. நி)

## வதிரி அம்மாள் கோயிலில் தமிழில் அர்ச்சனை

உடுப்பிட்டி, செவ்.

வதிரி இந்து வாலிபர் சங்கம் வதிரியில் தமிழில் பூஜைகள் நடைபெற ஒழுங்கு செய்துவருகிறது.

திரு. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது.

ஆசிரியர் திரு. சு. தர்மரத்தினம், திரு சி. ஞானேந்திரன், திரு நாகேந்திரம் ஆகியோரும் பேசினர்.

சமஸ்கிருதச் சுலோகங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதில் செயலாளர் திரு. தெ. நாகேந்திரம் ஈடுபட்டுள்ள தாகவும், எதிர் வரும் 'உற்சவகாலத்தில் வதிரி உல்லியனொல்லை அம்பாள் ஆலயத்தில் தமிழில் பூஜைகள் நடாத்த ஒழுங்கு செய்யப்படுமெனவும் இக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. தவத்திரு குன்றக்குடி அடிகாளாரை அழைப்பித்து அவர் முன்னிலையிலேயே இவ்வாலயத்தில் தமிழில் பூசை செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. க செல்வப்பிரகாசம் தலைமையில்பஜனைக்கோஷ்டியொன்றும் தெரிவுசெய்யப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 40 பேஸ் அக்கோடியன் விற்பனைக்கு உண்டு. சி. ஆனந்தராசா, ஆசிரியர், அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உடுப்பிட்டி 1475

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு 1969 டிசம்பர்பரீட்சை G. C. E. (O/L) தமிழ்மொழி பகுதி 1 மாதிரிகை வினுத்தாள்கள் பத்து இடம் பெற்றுள்ள பத்தாம் தமிழ்மலர்ப் பயிற்சி வினு-விடை விலை 3 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 1476

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 15—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற் சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி கணேசன் - பத்மினி
நடித்த
மல்லிகா

## டேவிட் பிறவுண் 850 உழவு இயந்திரம் விற்பனைக்கு

25 ஸ்ரீ 1077 உழவு இயந்திரம் பெட்டியுடன், தனியாள் பாவிப்பு. பூநகரி ப. நோ. கூ. சங்க சமாசத்தில் வேலை நேரங்களில் பார்வையிடலாம். எழுத்து மூலம் கோரிய கூடியகேள்வி ஏற்கப்படும் விண்ணப்பங்கள் 25-10-69இல் முடிவடையும். தலைவர் பூநகரி பல. நோ. கூ. சங்கச் சமாசம், பூநகரி.

த. காசிராசா
காரியதரிசி
1781

## அறிவித்தல்

### வைமன் உபமின் நிலையத்திலிருந்து பயனடையும் மின் பாவனையாளர்களுக்கு

மேற்படி உபமின் நிலையத்துடன் தொடர்புள்ள மின் இணைப்புப் பாதைகளில்அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ம்திகதிகாலை 8மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும் மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகிறது

ஏ.ரி சுந்தரம்
மாநகரசபைஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்
13-10-69 1790

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
ரகுநாதன் — சந்திரகலா
நடித்த
நிர்மலா

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நடித்த
நீ

ராஜா
(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Marlon Brando
John Saxon
in
THE APPALOOSA
(scope & color)

## தேவை

மாரீசன்கூடல் ப.நோ.கூ. சங்கத்திற்கு ஓர் முகாமையாளர் தேவை. தகைமையுடையோர் காரியதரிசி, மாரீசன்கூடல் ப. நோ. கூ. சங்கம் இளவாலை என்ற விலாசத்திற்கு 31-10-69க்கு முன் கிடைக்சக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

நிபந்தனைகள்

1. வயது:- 21 40 வயதுக்குட்பட்டவராக இருத்தல்வேண்டும்.

2 பிணை:- 'பிணைப்பணம் காசாக ரூபா 1500/-, உறுதிப் பிணையாக ரூபா 2500/-

3. தராதரம்:- கூட்டுறவுப் பயிற்சி சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும். அல்லது கூட்டுறவுப் பயிற்சி பெற்று க. பொ த. ப. வகுப்பு அல்லது S. S. C (எண்கணிதம், தமிழ் உட்பட)ஆறு பாடங்களில் சித்தியெய்தியவராக இருத்தல் வேண்டும்.

4 சம்பளம்:-
ரூபா 1680—2400
10X72 (எல்லாச்சகாயங்களும் உட்பட)

க கதிரித்தம்பி
காரியதரிசி

மாரீசன்கூடல் ப. நோ. கூ. சங்கம், இளவாலை.
14-10-69 1789

## விஸ்வமடு வீரர்களுக்கு வெற்றி

விஸ்வமடு, செவ்.

விஸ்வமடுவிவசாயப்படை வீரர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வீரர்கள் 2-0 கோல்களால் வெற்றியீட்டினர்.

திரு. ஏ. மகாலிங்கம் தலைமையில் விளையாடிய உத்தியோகஸ்தர்கள் கோஷ்டியில் இப்ரஹாம் லெப்பை, ஜெகநாதன் குணசிங்கம் ஆகியோரின் விளையாட்டு ரசிக்கக் கூடியதாகவிருந்தது.

திரு. ஏ. கைதாம்பிள்ளை தலைமையில் விளையாடிய வீரர்கள் கோஷ்டியில் எஸ். அம்பிகாபதி, ஆர். எதிர்மன்சிங்கி ஆகிய இருவரும் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டு வீரர்கள் கோஷ்டிக்கு வெற்றியீட்டிக் கொடுத்தனர்.

திரு. எஸ். ஜெயபாலன் இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (கா. நி)

REGAL JAFFNA
Daily 4-45, 7& 9-45p.m.
Terence Stamp
Sammantha Eggar
in

உதைபந்தாட்டம்

## றெக்ளமேஷன் ச.ச.நிலைய வடமாகாண சாம்பியன்

யாழ்ப்பாணம், புதன்

விளையாட்டமைச்சினுல் யாழ்மாவட்ட சனசமூக நிலையசாம்பியன்களிடையே நடத்தப் சாம்பியன் உதைபந்தாட்டப் போட்டியில் சாம்பியனுக வந்த றெக்கிளமேஷன் சனசமூக நிலையம் வடமாகாண சாம்பியனுக்கான உதைபந்தாட்டப் போட்டியிலும் வெற்றி பெற்று வடமாகாண சாம்பியனுகியது.

இவ் இறுதிப் போட்டியில் மன்னார் நானுட்டான் காரியாதிகாரிக் கோஷ்டியும் யாழ்ப்பாண றெக்கிளமேஷன் சனசமூக நிலையக் கோஷ்டியும் போட்டியிட்டன, இவ் ஆட்டம் தொடங்கிய 5 நிமிட்ங்களுக்குள் றெக்கிளமேஷன் சனசமூக நிலையக் கோஷ்டியின் இடதுகரைவீரர் தேவராசா முதலாவது கோலை மிகச் சாதுரியமாகப் போட்டார். இதன் பின் இக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரரான போல் இரண்டாவது கோலை போட்டார். இடைவேளையின்போது றெக்கிளமேஷன் கோஷ்டி 2—0 கோல்களைப் பெற்றிருந்தது:

இடைவேளையின் பின் ஆட்டம் சுவையாக இருந்த போதிலும் றெக்கிளமேஷன் கோஷ்டியினர் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டவண்ணமே இருந்தனர். ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள்இருக்கும்போது றெக்கிளமேஷன் கோஷ்டியின் முன்னணிவீரர் போல் மூன்ருவது கோலைப் போட்டார், மன்னார் கோஷ்டியின் பின்னணி வீரர் சீவரத்தினமும் முன்னணி வீரர் குறூசும் நன்ருக விளையாடினர். ஆட்டம் முடிவடையும் போது றெக்கிளமேஷன் கோஷ்டி 3—0 கோல்களால் எதிர்க்கோஷ்டியை தோற்கடித்து வடமாகாணச் சாம்பியனுகியது.

இப் போட்டி ஆரம்பமாகமுன் இரு கோஷ்டி வீரர்களையும்யாழ் மாவட்ட விளையாட்டமைச்சின் பொறுப்பதிகாரி திரு போல் ஜேசுதாசன் போட்டிக்குபிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணச் சிறைச்சாலை அதிகாரி திரு ஜான்சனுக்கு அறிமுகம் செய்துவைத்தார். இப் போட்டியில் சாம்பியனுக வந்த றெக்கிளமேஷன் சனசமூக நிலையத்துக்கு திரு ஜான்சன் வடமாகாண சாம்பியன் கேடயத்தையும்சான்றுப்பத்திரத்தையும் பரிசளித்தார். மன்னார் நானுட்டான் காரியாதிகாரி திரு சொக்கலிங்கமும் இப் பரிசளிப்பு விழாவில் உரையாற்றினார். (தே, நி)

......

## பாரதத்தில் ரூமேனியா அதிபர்

புதுடில்லி. அக். 14

ரூமேனிய அதிபர் திரு. சௌசங்கீயும் அவரது மனைவியார் திருமதி எலினுவும் இன்று பாரதம் வந்தார்கள். புதுடில்லியில் இவர்களுக்குபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஜனதிபதி திரு. வி. வி. கிரி விமான நிலையத்தில் இவர்களை வரவேற்ருர்.

## பேச்சுப் போட்டி முடிவுகள்

உரும்பிராய், செவ்

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற மகாத்மா காந்தி நூற்ருண்டு விழாப் பேச்சுப் போட்டி முடிவு விபரம் வருமாறு:

கீழ்ப் பிரிவு: செல்விகள் இ. பாமா, ச. [illegible], ச. சாந்தினி.

மத்திய பிரிவு: செல்விகள்

## வாணி வாசிகசாலை 9வது ஆண்டுவிழா

மூளாய், செவ்

மூளாய் வாணி வாசிகசாலை 9-வது ஆண்டுவிழாவும் சரஸ்வதி பூசையும் வருகிற 19-ம் திகதி மூளாய் தெற்கில் திரு. சதாசிவம் பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

அமரர் செல்லத்துரை ஆசிரியரின் திருவுருவப் படத்தையும் அன்றைய தினம் முன்னாள் தபால் மாஉதவி அதிகாரி திரு. கே. பேரம்பலம் திரைநீக்கம் செய்து வைப்பார். நிர்ழ்ச்சிகளில் டாக்டர் கெங்காசலம், வனபரிபாலன இலாகாவைச் சேர்ந்த திரு. கனகசபாபதி உட்படப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவர். இரட்டையர் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும், 'அவள் தந்த உயர்வு' என்ற நாடகமும் இடம்பெறும்.

## அத்தியாருக்கு வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 3-ம் பிரிவுஆட்டங்களின் சுற்றில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி காரைநகர் இந்துக் கல்லூரியை 2—0 கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பத்திலிருந்து இடைவேளை வரை எவரும் ஒரு கோலும்போடவில்லை. ஆட்டம் முடிவதற்கு 5-நிமிடங்கள் இருக்கும் போது நீர் வேலி அத்தியார் இந்துக் கல்லூரி முன்னணி வீரர் இ. பாலச்சந்திரன் அடுத்தடுத்துஇரண்டு கோல்களைப் போட்டு அத்தியாருக்கு வெற்றியீட்டிக்கொடுத்தார்.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றஇப்போட்டிக்கு திரு. எஸ். சோமஸ்கந்தர் மத்தியஸ்தம் வகித்தார் (கா.நி)

## பயிர்ச்செய்கைக் குழு

அராலி, செவ்.

அராலி தெற்கு - கிழக்குப் பயிர்ச்செய்கைக் குழுவின் நிர்வாகிகள் தெரிவு வலிகிழக்கு-மேற்கு கமத்தொழிற் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுருவின் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. தியாகராசாவும், செயலாளர் திரு வே. வி. மூர்த்தி, பொருளர் திரு. ச அப்பையா. குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

சோட்டை செவ்.

அடுத்த மாதம் தொடக்கம் தேசிய இளைஞர் சேவையில் பெண்களையும் சேர்ப்பதற்கு அரசாகம் தீர்மானித்துள்ளது,

இப்பொழுது இளைஞர்கள் மாத்திரமே இச் சேவையில் சேர்க்கப்படுகின்றனர். இதுவரை 12000 இளைஞர்கள் இச் சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் இவ் வருட முடிவில் இத்தொகை 50,000 ஆகுமெனவும் தேசிய இளைஞர் சபை தெரிவித்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி ,6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி கணேசன் - பத்மினி
நடித்த
மல்லிகா



ராஜா
(யாழ்ப்பாணம்)
Daily 4-45, 7, 9-45 P.M.
Poya, Prepoya 4 Shows
Marlon Brando
John Saxon
in
THE APPALOOSA
(scope & color)


திரு. எஸ். ஜெயபாலன் இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். (கா. நி)


REGAL JAFFNA
Daily 4-45,7& 9-45p.m.
Terence Stamp
Sammantha Eggar
in
THE COLLECTOR
(A ults Only)



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00&9-45pm
THE 3 MUSKETEERS
(Franscope-Technicolor)


உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற மகாத்மா காந்தி நூற்றுண்டு விழாப் பேச்சுப் போட்டி முடிவு விபரம் வருமாறு:

கீழ்ப் பிரிவு: செல்விகள் இ. பாமா, ச. கலாதேவி, ச. சாந்தினி.

மத்திய பிரிவு: செல்விகள் சு. சாந்தினி, ப. கௌசலை, செல்வன் செ. செல்வரத்தினம்.

மேற் பிரிவு: செல்விகள் ப. சகுந்தலாதேவி, சி. நகுலாதேவி, சு. இராஜேஸ்வரி.

பொதுத் சுன்மைக்குரிய விசேட பரிசில்களைப் பெறுவோர், செல்விகள் சு. சாந்தினி, இ பாமா, ப. சகுந்தலாதேவி.


வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி கணேசன் — சாவித்திரி நடித்த
களத்தூர் கண்ணம்மா
(புதிய கொப்பி)



ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 27-ந் திகதி (15-10-69)

**மேஷம்-** புதிய தொழில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கலாம். சிலருக்கு எதிர்பாராத பிரயாணமும் ஏற்படமுடியும் நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். அமைதியான தினம்.

**ரிஷபம்-** பணவிவகாரத்தில் திருப்திகரமான நிலைமை தென்படுகின்றது பூமியால் இலாபம் கிடைப்பதற்கும் இடமுண்டு. சிலருக்கு விவசாயத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படமுடியும். நல்ல செய்தியும் உண்டு.

**மிதுனம்-** பலவழிகளிலும் பணம் செலவாகும். சிலருக்கு வழக்கு விவகாரங்களும் தலையிடியைக்கொடுக்கும். நண்பர் ஒருவர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவார். கோஷ்டிச்சண்டையில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும்.

**கடகம்-** வாழ்க்கையில் புயல்வீசும். அதிக அலைச்சலுக்கும் இடமுண்டு. செலவினங்கள் அதிகமாகவிருக்கும் பிள்ளையொன்றின் உடல்நலம் சிறிதுபாதிக்கப்படலாம் தெய்வநம்பிக்கை சிறந்த துணையாகும்.

**சிம்மம்-** எதிர்பாராதவகையில் பணவருவாய்க்கு இடமுண்டு. வணிகர்களாயின் அதிக பயனடைவர். இல்லத்திலும் மகிழ் சிகரமான சம்பவம் இடம்பெறும். விருந்தினர்கள் வருகை தருவர்.

**கன்னி-** ஆணவப்போக்கினால் பிறருடைய வெறுப்புக்கு இலக்காக நேரிடலாம். அவசரமுடிவு துன்பத்தைத்தேடித்தரலாம் சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு.

**துலாம்-** இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இலாபகரமானநாள். பூமி விவகாரததில் சாதகமான முடிவு ஏற்படலாம். கணவன் - மனைவி உறவு சுமுகமாக இருக்கும் சுபதினம்.

**விருச்சிகம்-** நீண்டநாள் எண்ணம் இன்று செயலிலே முடியும். பிள்ளைகளால் பெருமைப்படக்கூடிய சம்பவங்கள் இடம்பெறும். விருந்தோம்பலில் சிறந்து விளங்குவீர்கள். திருப்திகரமான தினம்.


**தனுசு-** எதிலும் தடுமாற்றம் தென்படும். எதிரிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். நோய்க்கு இடம் கொடேல்.

**மகரம்-** மகிழ்ச்சிகரமான தினம். தம்பதிகள் வாழ்வில் தென்றல் வீசும். குடும்பத்தில் சுபகாரியம் ஒன்றும் இடம்பெறலாம். நண்பர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். சிறப்பான தினம்.

**கும்பம்-** வியாபாரத்துறையில் நஷ்டமேற்படலாம். இன்று புதிய முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் கடமையாற்றுமிடத்தில் விஷமிகளின் தொல்லைகள் அதிகரிக்கும். நிதானம் நன்று.

**மீனம்-** பொதுப்பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சிலருக்கு அரசியலிலும் ஆர்வம் ஏற்படும். பொதுமக்களின் ஒத்துழைப்புக்கிடைப்பதற்கும் இடமுண்டு. முன்னேற்றமான தினம்.

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**


இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 2-30, 6-30 9-30 போயா, பிரிபோயா 4 காட்கள்
கெப்பிட்டல்
(கொழும்பு)
பிளாஸா
(கொழும்பு)

ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ்★அசோகன்★ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனோகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
நீயும் நானும்





எப்பொழுதும்
அபிமானத்துக்குரியது
★
தெம்பூட்டும்
அளவானது
★
சுவையான
தரமுடையது
★
அதி சுத்தமானது
CCS
எலிபன்ட் ஹவுஸ்
சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
கொழும்பு - கண்டி - திருகோணமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று அமெரிக்காவில் நடைபெறும்

# 'எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக வியட்னும் கொள்கை மாருது'

## அதிபர் நிக்ஸன் உறுதி

நியுயோர்க், அக். 14

வியட்னுமில் நடைபெறும் யுத்தத்துக்கு எதிராக நாளைய தினம் அமெரிக்கா முழுவதும் பெரிய எடுப்பில் நடத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்டங்களினுல் எந்த வித பயனும் ஏற்படப் போவதில்லையென்று அதிபர் நிக்ஸன் அறிவித்திருக்கிருர்.

வியட்னுமிலிருந்து முற்ருகத் துருப்புகளை உடனடியாக திருப்பியழைக்கும்படி கோருபவர்கள் சர்வதேச நிலைமைகளைப் பற்றியும் நமது வாக்குறுதிகளையும் மறந்துவிடுகிருர்கள் என்று திரு. நிக்ஸன் கூறினுர்.

நாளை நடைபெறவிடுக்கும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக தமது வியட்னும் கொள்கை ஏதும் மாறப்போவதில்லை என்று அதிபர் நிக்ஸன் கூறினுர்.

கடந்த புதன்கிழமை நடந்த ஆர்ப்பாட்டங்களின் போது சிக்காகோ நகரில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் மிடையில் பலத்த மோதல்கள் ஏற்பட்டன.

திரு. நிக்ஸனின் வியட்னும் கொள்கைக்கு ஆதரவு தேடுவதற்காக ராஜாங்க அமைச்சர் வில்லியம் ரோஜர்ஸ் நாட்டு மக்களுக்கு டெலிவிஷன் மூலம் விடுத்த வேண்டுகோள் எதுவும் பலனளித்திருப்பதாகத் தெரியவில்லை. நாடு முழுவதும் பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சண்டையை நிறுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை உள்நாட்டில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் கெடுத்துவிடுவதாக திரு. ரோஜர்ஸ் டெலிவிஷனில் கூறினுர்.

இதற்கிடையில் அதிபர் நிக்ஸன் தமது அதிகாரிகளுடன் தொடர்ந்து வியட்னும் நிலைமை பற்றி ஆலோசனைகள் நடத்தி வருகின்ருர். இன்றும் ஆலோசனைகள் நடைபெறுகின்றன.

## சிறையில் பத்திரிகையாளருக்கு ஏற்பட்ட அனுபவம்

லண்டன், அக். 14

சீனுவில் இரண்டு ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்து இப்பொழுது லண்டன் திரும்பியுள்ள பத்திரிகையாளர் அந்தனி கிறே, சீனுவில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி விபரித்திருக்கிருர்.

முதலில் செங்காவலர் தம் வீட்டைச் சூழ்ந்துகொண்டார்களாம். பின்னர் தம்மைக் கறுப்புத் தீந்தையைக் கொண்டு பூசியதாகவும் திரு. கிறே கூறினுர். அதன் பின் ஒரு சிறு அறையில் காவல் வைத்தார்கள். அந்த அறையின் சுற்றளவு 8 அடி மட்டுந்தானும். அந்த அறையில் ஒரு படுக்கை மட்டுந்தான் இருந்தது.

## இலங்கைவரும் பிரிட்டிஷ் நாடகத் தம்பதிகள்

லண்டன், அக். 14

நாடகக் கலைஞர்களான கணவனையும் மனைவியையும் கொண்ட நாடகக்குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறது. லண்டனிலிருந்து இம்மாதம் 18-ந் திகதி தூரகிழக்கு நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் ஒன்றை ஆரம்பிக்கும் இவர்கள் டிசம்பர் மாத முதல் வாரத்தில் இலங்கை வந்துசேர்வார்கள்

பிரிட்டிஷ்கவுன்சிலின் ஆதரவில் இந்தச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளும் ஜோன் டேனர், பாபரா ஜெபோர்ட் தம்பதிகள் 'காதலின் வேதனைகள்' என்ற தமது நாடகத்தை ஆங்காங்கு மேடையேற்றுவர்

பாபரா ஜெபோர்ட் பிரபல்யம் பெற்ற ஒரு நாடக நடிகையாவார். இவர் 'யுலியஸ்' என்ற படத்தில் ஒரு பிரதான பாத்திரம் தாங்கி நடித்ததிலிருந்து சினிமா உலகிலும் ஒரு சிறந்த நடிகையாகப் பெயர்பெற்றிருக்கிருர். 'நடிப்பு ஒரு வேடிக்கையானது. அதே வேளை ஒரு கடினமான கைங்கரியமும்தான். என்னை பொறுத்தமட்டில் நடிப்பு ஒரு மனத்திருப்தியை அளிக்கும் ஒரு தொழிலாகவே கருதுகிறேன்' என்று பாபரா

நாடக நடிகராவார். ஷேக்ஸ்பியரின் பல நாடகங்களை மேடையேற்றி பிரபல்யம் பெற்றவர். தமது தற்போதைய சுற்றுப்பிரயாணம் பற்றி மேற்படி டெலிவிஷன் பேட்டியில் அவர் விவரிக்கையில் 'இலங்கை, இந்தியா பாகிஸ்தான், நேபாளம், ஆப்கானிஸ்தான், தாய்லாந்து, மலேசியா, சரவாக், சாபா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 43 நகரங்களில் 70க்கு மேலான நிகழ்ச்சிகளை நாம் அளிக்கவிருக்கிறேம்' என்று தெரிவித்தார்

'காதலின் வேதனைகள்' என்ற இந்நாடகம் காதல் நிலையையும், கல்யாணத்தையும் இரு அம்ச கருவாகக் கொண்ட ஒரு புதுமையான நாடகம் என்றும், தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் இந்நாடகம் பெரும் வெற்றியை ஈட்டித்தந்ததாக திரு டேனர் குறிப்பிட்டார்

இத்தம்பதிகள் டிசம்பர் மாதம் 4-ந் திகதி மதுரையிலிருந்து இலங்கை வருவார்கள், டிசம்பர் 5-ந் திகதி இவர்கள் தமது நாடகத்தைக் கண்டியில் மேடையேற்றுவார்கள். இதனையடுத்து டிசம்பர் 7, 8, 9-ம் திகதிகளில் கொழும்பில் இந் நாடகத்தை அரங்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்

வட அயர்லாந்தில்

# அமைதி திரும்பாவிட்டால் 'நேட்டோ' படைவரும்

## பிரிட்டிஷ் மந்திரி எச்சரிக்கை

லண்டன், அக். 14

வட அயர்லாந்தில் நிலைமை சீரடையாதுபோனுல் 'நட்டோ' வட அட்லாந்திக் இராணுவக் கூட்டிலிருந்து ஒரு பகுதி இராணுவத்தை அழைக்கவேண்டியிருக்கும் என்றுபிரிட்டன் அறிவித்திருக்கிறது.

வட அயர்லாந்தில் வகுப்புக்கலவரங்கள் சமீபகாலமாக அதிகரித்திருப்பது தெரிந்ததே. அங்கு றேமன் கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் அடிக்கடி மோதிக்கொண்டிருக்கிருர்கள். சில தினங்களுக்கு முன் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டன.

வட அயர்லாந்தில் இப்பொ

தேசித்திருக்கிறது. இதன் அடிப்படையில் நேட்டோவிலிருந்து தற்காலிகமாக ஒரு பகுதி இராணுவத்தைத் திருப்பியழைத்து வட அயர்லாந்துக்கு அனுப்புவது பற்றி பிரிட்டன் ஆலோசிக்கிறது.

இத்தகவல் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. வட அயர்லாந்தில் நிலைமை தொடர்ந்து சீரடையாமல் இருக்குமானுல் நேட்டோவிலிருந்து ஒரு பகுதி இராணுவத்தை அழைத்து அங்கு அனுப்ப வேண்டியிருக்குமென்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹீலி பாராளுமன்றத்தில் கூறி

நேற்று ஏற்பட்ட மோதல்களின்போ[illegible] கைகாரர்கள் பிரிட்டிஷ் இராணுவத்தின்மீது கற்களையும், கட்டிகளையும் வீசினுர்கள். பிரிட்டிஷ் துருப்புக்கள் அங்கு போடப்பட்டிருந்த தடைகளை எல்லாம் முறித்து உடைத்தார்கள். மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த திங்களன்று பெல்பாஸ்டில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் சுமார் ஆயிரம் பேர் ஆத்திரத்துடன் தெருக்களில் கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு கலவரங்களில் ஈடுபட்டபோது பிரிட்டிஷ் துருப்புக்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி அவர்களைத் தாக்கி

## தமிழரசுக்கட்சி புதிய கிளைகள்

### மண்கும்பான்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைத் தமிழரசுக் கட்சி மண்கும்பான் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: சி. கணபதிப்பிள்ளை. துணைத்தலைவர்: செ. திருநாவுக்கரசு, செயலாளர்: வை. குணரத்தினம், துணைச்செயலாளர்: செ. செல்வரத்தினம், பொருளாளர்: மு. குமாரசாமி, நிர்வாக சபை உறுப்பினர்கள்: செ. இந்திரசித்து, வி. வைத்திலிங்கம், வே. கோபாலபிள்ளை, பொ. சுந்தரலிங்கம் சி. குணரத்தினம், அ. துரைராசா

### ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை தமிழரசுக்கட்சிக்கிளை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்,

தலைவர்: க. ஆசைப்பிள்ளை, துணைத்தலைவர்: ஜி. ஏ. பெர்ஞண்டோ, செயலாளர்: இ. சோமசுந்தரம், துணைச்செயலாளர்: அ. பத்திநாதன். பொருளாளர்: த. பிரான்சிஸ், நிர்வாக சபைஉறுப்பினர்கள்: ஆ. குணரத்தினம், ஜி. அந்தோனிச்சாமி, ரி. ஞானசேகரம், ஜி. கோலின், எஸ். மரியதாஸ், ஐ. வேலாயுதம், இ. சபாரத்தினம், எம். எப். அல்பேர்ட், வி. தியாகராசா.

## தாயகம் திரும்புவோருக்கு தீப்பிடிக்காத வீடுகள்

### தமிழக அரசு திட்டம்

இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பும் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தமிழ் நாடு அரசாங்கம் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

3 ஆயிரம் குடும்பத்தினர் விவசாயத்தில் ஈடுபடுத்தப் படுவார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தீப்பிடிக்காத வீடு, 2 மாடுகள் விவசாய கருவிகள், ரூ. 50 வீதம் 6 மாதகாலத்துக்கு உதவித் தொகை ஆகியவை வழங்கப்படும்.

இந்த திட்டம் நெல்லை மாவட்டத்தில் 13 கிராமங்களிலும் திருச்சி மாவட்டத்தில் 4 கிராமங்களிலும், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு கிராமத்திலும், ராமநாதபுரத்தில் 2 கிராமங்களிலும், மதுரையில் 3 கிராமங்களிலும் அமுல் நடத்தப்படும்.

310 குடும்பத்தினர் தென்னை மர உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுவார்கள். இந்த திட்டம் தஞ்சை ராமநாதபுரம் கடலோரப் பகுதிகளில் நடத்தப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கு ரூ 7200 செலவிடப்படும் அதாவது ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 5 ஏக்கர் நிலம் தீப்பிடிக்காத வீடு, தென்னங்கன்றுகள் தேவையான கருவிகள், மாடு, உதவித்தொகை (ரூ. 50 வீதம் 6 மாதங்களுக்கு) ஆகிய வசதிகள் செய்து கொடுக்கப் படும்.

நெல்லை, மதுரை, திருச்சி மாவட்டங்களில் பால் பண்ணைகள் தொடங்க திட்டமிடப்பட்டு இருக்கிறது, இதில் ஈடுபடும் குடும்பங்களுக்கு தலா 7,535 ரூபாய் செலவிடப்படும். ஒவ்வொரு இலங்கை தமிழருக்கும் 3 பால் மாடுகள் கிடைக்கலாம்.

கோழி வளர்க்க விரும்பும் தமிழர்கள் 1000 கோழிகள் வளர்க்கலாம். இதற்கு ரூ 2920 செலவாகும்.

ரூ 14 லட்சம் செலவில் 100 தமிழர்களுக்கு மீன் பிடிக்கும் பயிற்சி அளிக்கப் படும்.

இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக தமிழ்நாட்டில் உள்ள மில்களில் உள்ள கதிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனுமதிக்கும்படி டில்லி அரசிடம் தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

திருச்செந்தூர் கூட்டுறவு மில்லில் கதிர்களை அதிகப் படுத்துவதற்காக டில்லி அரசு ஏற்கனவே 15 லட்ச ரூபாய் கடனுக அனுமதித்துள்ளது இதனுல் 200 பேருக்கு வேலை கிடைக்கும். இதே போன்ற கடன்உதவி ஸ்ரீ வில்லிபுத்தூர் கூட்டுறவு மில்லுக்கு வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

### தேயிலைத் தோட்டம்

நீலகிரி மாவட்டத்தில் மேலும் 3 ஆயிரம் ஏக்கரில் தேயிலைத் தோட்டம் அமைக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது இந்தத் திட்டத்துக்கு ரூ 450 லட்சம் செலவாகும்.

ஆனைமலை, கொடைக்கானல் பகுதியில் வண்டராவு காட்டுப்பகுதி ஆகிய இடங்களில் தேயிலைத்தோட்டம் அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நெல்லை மாவட்டத்திலுள்ள காவல் கிணறு என்ற இடத்தில் ஓடு தயாரிப்பு தொழில் பேட்டை தொடங்குவதுபற்றி ஆலோசிக்கப் படுகிறது. இதற்கு 16 லட்சம் ரூபாய் செலவாகும்.

இலங்கையில் இருந்துஇது வரை 10 ஆயிரம் தமிழர்கள் வந்து இருக்கிருர்கள். இந்த ஆண்டில் இன்னும் அதிக அளவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ்ப்பாணத்துக்கே அடிகளின் சேவை அதிகம் கிடைத்தது

## விபுலானந்தர் விழாவில் கலாநிதி வித்தியானந்தன்

கல்முனை, செவ்வாய்

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு சிலை எடுக்கும் இத்தினத்

அடிகளாரின் நாமத்திலே பரிசளிக்கும் திட்டம்ஒன்றை வகுத்து வருடாவருடம் சிறந்த மாணவனுக்கு பரிசு

நடைபெற்ற உரையரங்கிலே பேசிய கலாநிதி சு. வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்திருக்கிறது.

வட அயர்லாந்தில் வகுப்புக்கலவரங்கள் சமீபகாலமாக அதிகரித்திருப்பது தெரிந்ததே. அங்கு றேமன் கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் அடிக்கடி மோதிக்கொண்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன. வட அயர்லாந்தில் இப்பொழுது ஏராளமான பிரிட்டிஷ் துருப்புகள் நிலைகொண்டிருக்கின்றன. இவர்கள் அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்காகப் பெரும் பாடுபட்டுவந்திருக்கிறார்கள். அமைதியான முறையில் இவர்கள் எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதால் திருப்பிச் சுடும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளனர் இந்த நடவடிக்கைகள் யாவுமே இதுவரை சரியாகப் பலனளிக்காததால் பிரிட்டன் மேலும் ஸ்திரமான நடவடிக்கைகள் எடுக்க உத்

இத்தகவல் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. வட அயர்லாந்தில் நிலைமை தொடர்ந்து சீரடையாமல் இருக்குமானால் நேட்டோவிலிருந்து ஒரு பகுதி இராணுவத்தை அழைத்து அங்கு அனுப்ப வேண்டியிருக்குமென்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹீலி பாராளுமன்றத்தில் கூறினார்.

பிரிட்டிஷ் உள்நாட்டமைச்சர் திரு. கெலகாம் அங்குள்ள நிலைமை பற்றிப் பாராளுமன்றத்தில் விளக்கினார். அங்குள்ள தீவிர வகுப்புவாதிகள் யாவரும் துரத்தியடிக்கப்படவேண்டுமென்று முக்கிய மதத் தலைவர்கள் தம்மிடம் கூறியதாகக் கெலகாம் கூறினார்

நேற்றும் பலத்த மோதல்கள் வட அயர்லாந்தில் இடம்பெற்றன. புரட்டஸ்தாந்து மக்கள் பகுதியில் உடைத்தார்கள். மூன்றுபேர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த திங்களன்று பெல்பாஸ்டில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் சுமார் ஆயிரம் பேர் ஆத்திரத்துடன் தெருக்களில் கோஷங்களைக் கோஷித்துக்கொண்டு கலவரங்களில் ஈடுபட்டபோது பிரிட்டிஷ் துருப்புக்கள் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி அவர்களைத் துரத்தியடித்தார்கள்.

'இராணுவம் வெளியேறட்டும்' என்று கோஷித்துக்கொண்டுவந்த புரட்டஸ்தாந்துக்காரர்கள் போத்தல்களையும் கற்களையும், இராணுவத்தினர்மீது வீசினார்கள். இரும்புத் துண்டுகளையும், தீப்பந்துகளையும் எறிவதற்கு அவர்கள் கவண்களையும் பயன்படுத்தினார்கள். அவர்கள் துப்பாக்கியாலும் சில சமயங்களில் சுட்டார்கள்.

நடித்ததிலிருந்து சினிமா உலகிலும் ஒரு சிறந்த நடிகையாகப் பெயர்பெற்றிருக்கிறார். 'நடிப்பு ஒரு வேடிக்கையானது. அதே வேளை ஒரு கடினமான கைங்கரியமும்தான். என்னை பொறுத்தமட்டில் நடிப்பு ஒரு மனத்திருப்தியையளிக்கும் ஒரு தொழிலாகவே கருதுகிறேன்' என்று பாபரா லண்டனில் டெலிவிஷன் பேட்டி ஒன்றின்போது குறிப்பிட்டார்

பாபராவின் கணவரான ஜோன் டேனர் ஒரு சிறந்த

இத்தம்பதிகள் டிசம்பர் மாதம் 4-ந் திகதி மதுரையிலிருந்து இலங்கை வருவார்கள், டிசம்பர் 5-ந் திகதி இவர்கள் தமது நாடகத்தைக் கண்டியில் மேடையேற்றுவார்கள். இதனையடுத்து டிசம்பர் 7, 8, 9-ம் திகதிகளில் கொழும்பில் இந் நாடகத்தை அரங்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. டிசம்பர் 10-ம் திகதி இவர்கள் இலங்கையிலிருந்து ஹைதராபாத் செல்வார்கள்

## விபுலானந்தர் விழாவில் கலாநிதி வித்தியானந்தன்

கல்முனை, செவ்வாய்

முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு சிலை எடுக்கும் இத்தினத்திலே அடிகளார் பெயரால் கல்வி உபகார நிதி ஆரம்பித்துவைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். பெரியவர்கள் பலர்சேர்ந்து இப்படிப்பட்ட நிதிஒன்றை சுவாமி அவர்களின் பெயரால் ஆரம்பிக்க வேண்டும் என்று இப்போது யோசனை கூறுவதற்குமுன்பே 1955ம் ஆண்டில் சுவாமி அவர்களின் மாணாக்கர்களில் ஒருவனாகிய நான் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே விபுலாநந்த அடிகளாரின் நாமத்திலே பரிசளிக்கும் திட்டம்ஒன்றை வகுத்து வருடாவருடம் சிறந்த மாணவனுக்கு பரிசு வழங்கிவருகின்றேன் என்று கூறுவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.''

மட்டக்களப்பு காரைதீவிலே சுவாமி விபுலாநந்தருக்கு சிலை அமைத்த விழாவிலே இரண்டாம் நாள் நிகழ்ச்சியாகிய உரைஅரங்கிலே உரையாற்றுகையில் கலாநிதி சு. வித்தியானந்தன் மேல்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலவர்மணி . பெரிய தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற உரையரங்கிலே பேசிய கலாநிதி சு. வித்தியானந்தன் மேலும் கூறியதாவது:

சுவாமி விபுலாநந்தர் மட்டக்களப்பிற்கு மட்டும் சொந்தமானவர் என்று எவருமே கருதமுடியாது.

சுவாமிகளின் அளப்பரிய சேவை யாழ்ப்பாணத்திலேதான் கூடுதலாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்திலே இருந்த காலத்திலேதான் துறவு பூணும் பரிபக்குவநிலை ஏற்பட்டது. சுவாமிகளை துறவியாக்கிய பெருமை யாழ்ப்பாணத்

(4-ம் பக்கம் பார்க்க)

'இந்தியருக்கு' இலங்கை

## பிரஜாவுரிமை கிடைத்ததால் சட்டத்தை ஆதரித்தோம்'

### அல்லைப்பிட்டியில் கிளிநொச்சி எம்.பி

மண்டைதீவு, செவ்வாய்

'ஐந்தேகால் லட்சம் மலையகத் தமிழர்களை இந் நாட்டிலிருந்து வெளியேற்றும் சட்டத்திற்கு நாம் ஏன் ஆதரவு அளித்தோம் எனச் சிலர் கேட்கிறார்கள். இச்சட்டத்தில் நாடற்றவர் என்ற பிரச்னை இல்லாதிருந்தது. அத்துடன் மூன்றேகால் லட்சம் இந்திய மக்களுக்கு இலங்கை பிரஜாஉரிமையும், வாக்குரிமையும் வழங்கியது, ஆதலாலேயே இச்சட்டத்தை ஆதரித்தோம்.

அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. தவவிநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலும் கூறியதாவது:

1948-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தில் நாடற்றவர் பிரச்னை இருந்ததால் அதனை எதிர்த்தோம்.

1958-ம் ஆண்டு அடையாள அட்டை மசோதா கொண்டுவரப்பட்டபோது அதில் மலையக மக்களுக்கு மட்டுமே எனக் குறிப்பிட்டிருந்ததால் அதனை எதிர்த்தோம். ஆனால் பின்னர் கொண்டுவரப்பட்ட அடையாள அட்டை மசோதாவில் இலங்கை மக்கள் எல்லோருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும் என்றிருந்ததால் அதனை ஆதரித்தோம்.

தமிழரசுக்கட்சி ஏமாந்திருக்கலாம்; ஏமாற்றப்பட்டிருக்கலாம். ஆனால் அது ஒருபோதும் தமிழ் மக்களை ஏமாற்றவில்லை. ஏமாற்றப்போவதுமில்லை.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறியதாவது:

தீண்டாமைப் பிரச்னை பற்றி மற்ற எந்தக் கட்சியும் இன்றுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தமிழரசுக்கட்சி ஒன்று தான் இப்பிரச்னையை தீர்த்துவைக்கும்.

திரு. எம். ஆலாலசுந்தரம், திரு. வி. கணபதிப்பிள்ளை, திரு எஸ். செபஸ்தியாம்பிள்ளை உட்பட மற்றும் பலர் பேசினார்கள்.

---

## அதிசய காமிரா

சென்னை அக் 14

விளம்பரத் தொழிலுக்கு பயன்படக்கூடிய அதிசய கண்காமிராஒன்றை இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் உள்ள கிளாரியின் மக்கான் கொம்பனி வரவழைத்துள்ளது.

விளம்பர டிசைன்களையும் படங்களையும் மற்றபொருள்களையும் இந்தக காமிராவின் மூலம் பார்க்கும்போது அவை எந்த அளவுக்கு பார்ப்பவரின் கவனத்தை கவருகின்றன என்பதைஇக் காமிரா மூலம் அறியமுடியும்.

## எழுத்தாளருக்கு பணமுடிப்பு

சென்னை, அக். 14

எழுத்தாளர் தி. ஜ. ரகங்நாதனுக்கு அமைச்சர் மாதவன் 10,001 பணமுடிப்பு வழங்கினார். திரு. தி. ஜ. ரங்கநாதனின் மணிவிழா சென்னை மயிலாப்பூர் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. திரு. கி. வா. ஜெகநாதன் தலைமைவகித்தார்.

---

## எம். ஜி. ஆர். தொகுதியில் அண்ணாசிலை

சென்னை, அக். 14

நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனின் தொகுதியான பறங்கிமலைத் தொகுதியில் அண்ணா உருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி நேற்றுத் திறந்துவைத்தார்.

பறங்கிமலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இச்சிலை திறப்பு விழாவுக்குத் தலைமைவகித்தார்.

---

## விவசாய போதனாசிரியர் பயிற்சி

யாழ்ப்பாணம், புதன்

வவனியாவிவசாயத்திணைக்களத்தில் கடமையாற்றிவந்த திரு பொ. கனகநாயகமும் திரு. பி. தர்மலிங்கமும் குண்டசாலையில் விவசாயப் போதனாசிரியர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் நேற்று முன் தினம் முதல் தமது பயிற்சியை ஆரம்பித்தார்கள்.

## சிறு குளிசைதான் ஆனால் அதற்கான செலவோ . . . .

ஹாம்பார்க், அக். 14

உடல்நலம் சீராக இல்லை என்றால், உடனடியாக மருத்துவரிடம் சென்று கலந்தாலோசித்து மருந்துவாங்கிச் சாப்பிடுகிறோம்; அல்லது ஊசி குத்திக்கொள்கிறோம். ஆனால் குறிப்பிட்ட மருந்து உற்பத்தியாகுமுன்னர், அதற்கு நீண்ட பின்னணி இருக்கிறது. கணிசமான பணச்செலவில் நீண்ட ஆராய்ச்சி செய்த பின்னர் முடிவில் ஒரு மருந்து தயாரிக்கப்படுகிறது. 4000க்கும் அதிகமான பண்டங்களைப் பயன்படுத்தி இறுதியில் ஒரு மருந்து தயாரிக்கப்படுவதும் உண்டு.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் மருந்துத் தொழில் துறையினர், ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கும் தொகை, கடந்த பத்தாண்டுகளில் 4 மடங்கு அதிகரித்துள்ளது. மருந்துத் தொழிலிலும் அமோகமாக முன்னேறி வருகிறது. மொத்த விற்பனைத்தொகையில் ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கப்படும் தொகை 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக அதிகரித்துள்ளது. சுமார் 12.50கோடி டாலர் மருந்து ஆராய்ச்சிக்காகச்செலவழிக்கப்படுகிறது.

அணுசக்தி விண்வெளி ஆராய்ச்சித்துறைகளைப் போல, புதிய மருந்துகள் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியும், 'பணம் விழுங்கும்'' துறையாகும். ஜெர்மனியில் மட்டும் 1948 முதல் 1966 வரை 1710 கோடி டாலர், மருந்து ஆராய்ச்சிக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது ஆனல் 1967-68-ல் மட்டும் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக 280கோடி டாலர் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில் 40 சதவிகிதம் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் செலவழித்து இருக்கின்றன.

புதிய மருந்து உருவாக்குவது என்பதுஎளிதானகாரியமல்ல. 4000 விதமான பொருள்களை மாற்றிமாற்றி பயன்படுத்தி ஆராய்ச்சி நடத்தி, கடைசியில் ஒரு புதிய அபூர்வமானமருந்தை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள். அத்துடன் விஞ்ஞானிகள், உதவியாளர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் பிற வசதிக்காக ஆண்டுக்கு 75,000டாலர்வரை செலவாகிறது.

மருந்து கண்டுபிடிப்புக்காக இவ்வளவு அதிகமாக செலவழித்தபோதிலும், இது ஒருவகையில் சேமிப்பு ஆகும். ஏனெனில் தொடக்க நிலையில் வியாதிகளை ஒடுக்குவதால், மற்ற எல்லாவகையில் மிச்சமாகிறது அல்லவா? மருத்துவத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, ஜெர்மனியில் நோயாளிகள் தங்கியிருக்கும் சராசரி நாட்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

---

இன்று

## சேவைநலம் பாராட்டு விழா

சுன்னாகம், புதன்

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் ஸ்தாபகரும் தலைமையாசிரியருமான திரு. க. நாகலிங்கம் சேவையிலிருந்து ஒய்வு பெறுவதை முன்னிட்டு இன்று மாலை வித்தியாசாலை மண்டபத்தில் சேவைநலம் பாராட்டுவிழா இன்றுநடைபெறவிருக்கிறது. துணைத் தலைமையாசிரியர் திரு. செ. இரத்தினம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவை பெற்றோர் ஆசிரிய மாணவர்கள் ஒழுங்கு செய்துள்ளனர்.

விழாவில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், சுன்னாகம் ப. ச. தலைவர் திரு. பொ. நாகலிங்கம், உடுவில் வட்டார வித்தியாதிகாரி திரு. ச. இராசா உட்படப் பலர் கலந்து கொண்டு பேசுவர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.





எலிகளா?

றகுமின்,

வீட்டிலோ, வயலிலோ, தோட்டத்திலோ எலிகளை இல்லாதொழிக்கும்.

றகுமின் எலிகளைத் தான் கொல்லும்; வீட்டுப் பிராணிகளையோ, மனிதரையோ பாதிக்காது.

றகுமின் சிறிய சிக்கனப் பக்கெட்டில் கிடைக்கும்.

றகுமின்,
ஒரு பிரத்தியேக பேயர் தயாரிப்பு.
வாங்கக் கிடைப்பவற்றில் மிகச் சிறந்த எலிநாசினி.

BAYER

உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி.

இலங்கையில் அடைத்து விநியோகிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

R9609


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

போராட்டத்தில், முயற்சியில் படுகிற துன்பத்தில்தான் இன்பம் இருக்கிறது; வெற்றியில் மட்டுமல்ல —மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் புரட்டாதி மாதம் 29-ந் திகதி (15 - 10 - 69)


## பனை மகோற்சவம்

அம்பாந்தோட்டைப்பகுதியில் இன்று பணம் விதைகள் நாட்டப்படுவது ஒரு பெரும் வைபவமாகக்கொண்டாடப்படுகிறது. உள்நாட்ட மைச்சர் டாக்டர் தகநாயகா பனம் விதைகள் சிலவற்றை நாட்டி இவ்வைபவத்தை ஆரம்பித்து வைக்கிறார். யாழ்ப்பாண நகர மேயரும் அளவெட்டி பலநோக்கக்கூட்டுறவுச் சங்கத்தினரும் முப்பதாயிரம் பனம் விதைகளை அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். இதற்குக் காந்திய சேவா சங்கத்தினரின் உதவியுமுண்டு. கற்பகதரு என்று பெயர் பெற்றிருந்தும் என்ன காரணமோ அதனைச் சரியாகப் பயன்படுத்த அரசின் ஆதரவு இதுவரை இடைக்கவில்லை. வடக்கிலிருந்து பனை தெற்கே செல்வதால் இனியாவது பனையின் மகத்துவத்தை அரசும் நாடும் நாட்டு மக்களும் உணர்ந்து பனைச் செல்வத்தைப் பயன்படுத்தி நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடைவதற்கு வழிபிறக்குமென நம்புவோம்.

கடல் அரிப்பதைத்தடுக்கவும், காற்றுக் காலத்தில் மண்ணும் தூசியும் நகரின் உட்புறத்தினுள் புகுந்து சுகாதாரத்துக்குக்கேடு விளைவிக்காமல் தடுக்கவுமே அம்பாந்தோட்டைப் பகுதியில் பனை வளர்க்கத் துணிந்ததற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

பனை எங்கிருந்து எப்படி வந்ததோ தெரியவில்லை. ஆனாலும் இது தமிழ்நாட்டிலும் ஈழத்தில் தமிழ்ப் பகுதிகளிலும்தான் இதுவரை யாரும் கவனம்செலுத்தாமலே செழித்து வளர்ந்தோங்கிவந்திருக்கிறது என்றாலும் பனையைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவும் மக்களின் உணவுத் தேவையையும் மற்றும் தேவைகளையும் நிறைவேற்றவும் தமிழ்நாடு முயற்சிசெய்து முன்னேற்றமும் கண்டிருக்கிறது. பனைச் செல்வத்தை ...

பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று ஆட்சிமன்றத்தில் தனியார் பிரேரணையொன்று நிறைவேற்றப் பட்டுப் பல மாதங்களாகியும்கூட இன்னும் அந்த நிலையத்தை அமைப்பதற்கான முயற்சி நடைபெறவில்லை. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதி பாடினார். வள்ளுவனை உலகிற்குக்கொடுத்துவிட்டு தமிழ்நாடு வள்ளுவனை மறந்துவிட்டது என்று இதற்குச் சிலர் வியாக்கியானம் செய்தது போல பனைச்செல்வத்தைத் தெற்கே கொடுத்துவிட்டு வடக்கு அதை மறந்துவிடக்கூடாது. இப்போதுகூட பனைச்செல்வத்தை வடக்கு, அரசு உதவியோ வேறு உதவியோ இல்லாமலே பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும் அதைச் சரிவரச்செய்யவில்லை எமது முந்தையோர் பனைச்செல்வத்தைப் பயன்படுத்தி நீண்டகாலம் திடகாத்திரமாக வாழ்ந்தனர். அதை மறந்ததன் விளைவுதான் பசியும் பட்டினியும் பொருளாதாரக் கஷ்டமும் வடக்கில் ஒரு பனையைத் தறித்து வீழ்த்தும் போது இரு பனம் விதைகளை நாட்டுவதென்று சங்கற்பம் செய்து கொள்ளவேண்டும். அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் பனம்பொருள் உற்பத்தி சம்பந்தமாகப் பயிற்சிபெறுவதற்கு இங்கிருந்து சிலரை அனுப்பவும் முயற்சிசெய்வது அவசியம். எது எதெற்கெல்லாமோ எந்த நாடுகளுக்கோ பயிற்சிபெறுவதற்கு இங்கிருந்து யார் யாரோ அனுப்பப்படும் போது பனம்பொருள் ஆராய்ச்சிக்கென ஒரு சிலரை அனுப்பினால் என்ன?

மரம் நாட்டு விழா ஆண்டுதோறும் நடைபெறுகிறது. குடியேற்றத்திட்டங்களை உருவாக்கும் போது மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்படுவதால் மழை பொய்த்துவிடுகிறதென்று விஷயம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ...

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,புதன்

திருநெல்வேலி சைவமுன்னேற்றக்கழகத்தின் ஆதரவில் பரமேஸ்வராச் சந்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் நவராத்திரி விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வழக்கறிஞர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெறும்.

வழக்கறிஞர்கள் ரி சங்கர பிள்ளை, என் ரி. சிவஞானம், சி. அருளம்பலம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

அரியாலை சகோதரர்களினதும், இசைப்புலவர் என். சண்முகரத்தினத்திதும் இன்னிசையும் நடைபெறும். (கா. நி)

0 0 0

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும் நவராத்திரி விழா இன்றைய நிகழ்ச்சியில் மாலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை கல்லூரி ஆசிரியைகளின் வாத்திய இசையும், இராஜேஸ்வரி கோஷ்டியினரின் மேளவாத்தியக்கச்சேரியும் நிகழும்.

0 0 0

சுழிபுரம் செவ்வாய்

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நவராத்திரிவிழா ஆசிரிய மாணவர்களால் விமரிசையாக கொண்டாடப்படுகின்றது. தினமும், கூட்டுப்பிரார்த்தனை, பூசை, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

0 0 0

### உடுவிலில்

உடுவில் கிராமசபை கலைவளர்ச்சிக்கழகம் கடந்த 12-ம்திகதிதொடக்கம் நவராத்திரிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடிவருகிறது உடுவில் சிராமசபைத் திறந்த வெளியரங்கில் தினமும்மாலை 6-30 மணிமுதல்விழா நடைபெறும். 20-ம் திகதியுடன் விழா முடிவடையும். கடைசி நாள் நிகழ்ச்சியில் உடுவில் எம்.பி. கலந்து கொள்வார்.

நான்காம் நாள் நிகழ்ச்சி இன்று சமாதான நீதிபதி திரு. த. தம்பிரத்தினம் தலைமையில் நிகழும். செல்வி நேசபூபதி நாகலிங்கம், திரு. இராம்குமாரசுவாமி ஆகியோரின் இன்னிசைக்கச்சேரியும், மங்களஇசையும் விழாவில் இடம்பெறும்.

0 0 0

### குருநாகலில்

குருநாகல் சைவமகாசபை நவராத்திரி விழாவைக் கொண்டாடிவருகிறது. பிரதிதினமும் மாலை 6 மணி தொடக்கம் கூட்டுப்பிரார்த்தனை, சமய சொற்பொழிவுகள், சங்கீதம், நடனம் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

## 'கலைஞரைக் கௌரவிக்க வேண்டியதுமேலானகடமை'

### நவராத்திரி விழாவில்உடுவில் எம். பி

யாழ்ப்பாணம், செவ்

"கலைமகளுக்கு விழா எடுப்பது பழங்காலந் தொட்டு நடைபெற்றுவரும் வழக்கம். இத்தினங்களில் முத்தமிழ்க் கலைக்கு ஆக்கம் தேடி, கலைஞர்கள் கலைவாணியைப் போற்றி வழிபாடு நடத்துவர். கலைவளர்ச்சியைத் தமிழ் மக்கள் உயிரிலும் பெரிதாக மதித்து வந்துள்ளனர்."

உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் நேற்று உடுவில் கிராமசபைத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற நவராத்திரிக் கலைவிழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"முத்தமிழ்க் கலைக்கு ஒரு மேலான ஸ்தானத்தை எமது மக்கள் அளித்து கலைஞரைக் கௌரவிக்கவேண்டியது மேலான கடமை. பண் ... சமூகத்தில் கலைஞர்களுக்கு விசேஷ மதிப்பேற்படுகின்றது. வறுமையில் வாடி வதங்கும் கலைஞர்களின் புனர்வாழ்வுக்குத் தனவந்தர்களின் ஒத்தாசை பெரிதும் தேவைப்படுகிறது."

திரு. பரம் தில்லைராஜாவின் இன்னிசைக் கச்சேரி, இணுவை என். ஆர். சின்னராசா குழுவினரின் மங்கள இசை, இணுவில் கிராமிய நடனக்கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

......

## 'இரட்டைதட்டு பஸ்வேணடாம்'

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும், இனிமேல் புதிதாக இரட்டைத் தட்டு பஸ்களை சேவையில் படுத்தவேண்டாமென்று ...

காங்கிரஸ் கட்சி நெருக்கடி

# தலைவர்களுக்கிடையில் விரைவில்பலப்பரீட்சை?

புதுடில்லி, அக். 14

இந்தியக் காங்கிரஸ் கட்சியில் பெரிய தலைவர்களுக்கிடையில் பெரும் மோதல் ஒன்று வெகு விரைவில் ஏற்படக்கூடுமென்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு. சி. சுப்பிரமணியம் விலகியதாய, அவரைக் காரியக் கமிட்டியிலிருந்தும் விலக்கிவிடச் 'சின்டிகேட்' தலைவர்கள் முயற்சிகள் எடுத்துவருகின்றார்கள். காரியக்கமிட்டியில் பிரதமர் இந்திராவின் கை ஓங்காமல் செய்வதற்கே இந்த முயற்சியென்று கூறப்படுகிறது.

காரியக் கமிட்டி இம்மாதம் 30ந் திகதி கூடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அன்று சில முக்கிய திருப்பங்கள் ஏற்படலாமென்று கருதப்படுகிறது.

இப்பொழுதுள்ள நிலைமையில் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இந்திரா ஆதரவாளர்களதும் சின்டிகேட் ஆதரவாளர்களதும்நிலைமை வருமாறு:

காரியக்கமிட்டியில் இந்திராகாந்தியின்ஆதரவாளர்கள் 11 பேர் இருக்கிறார்கள். அவர்கள் விவரம்:-

இந்திரா காந்தி காந்தி ஜெகஜீவன்ராம், சவான், பக்ருதீன் அலி அகமது சுப்பிரமணியம், வி. பி. நாயக் பிரமானந்தரெட்டி, மோகன்லால் சுகாதியா, கே. சி. ஆபிரகாம், உமா சங்கர் தீட்சித் சாதிக் அலி.

சிண்டிகேட் ஆதரவாளர்கள் 10 பேர் இருக்கின்றார்கள். அவர்கள் விவரம்:-

நிஜலிங்கப்பா, மொரார்ஜி தேசாய், காமராஜர், எஸ். கே. பட்டீல், ஆதுல்ய கோஷ், ராம்சுபக்சிங், சி பி. குப்தா, இதேந்திர தேசாய், சங்கர் தயாள் சர்மா, வெங்கடசுப்பையா,

இதன்படி இப்போது இந்திரா காந்தியின் கை ஓங்கி இருக்கிறது. அதாவது 'சிண்டிகேட்' டைவிட ஒரு உறுப்பினர் இந்திரா பக்கம் அதிகமாக இருக்கிறார்.

இந்த நிலையில் சுப்பிரமணியத்தை காரியக்கமிட்டியில் இருந்து நீக்கினால் இந்திராகாந்தியின் நிலைமை ஆபத்தாக முடியும்.

சுப்பிரமணியம் போய் விட்டால் காரியக்கமிட்டியில் இந்திரா காந்திக்கும் சிண்டிகேட்டுக்கும் ஆளுக்கு 10 வீதம் சரிசமமான பலம் இருக்கும்

நிஜலிங்கப்பா, தலைவருக்கு உள்ள விசேஷ ஒட்டை சிண்டிகேட்பக்கம் போட்டு, தங்களுக்கு சாதகமாக எந்த ஒருதீர்மானத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். இதேபோல இந்திரா காந்தி ஆதரவாளர்கள் கொண்டுவரும் தீர்மானங்களை நிறைவேறாமல் செய்து விடவும் முடியும்.

அதனால்தான் சுப்பிரமணியத்தை விலக்குவதில் நிஜலிங்கப்பாவும் அவருடைய ஆதரவாளர்களும் தீவிரமாக இருக்கிறார்கள்.

## "இராணுவம், பொலிஸ் மக்களின் நண்பராயிருக்க வேண்டும்"

பருத்தித்துறை, செவ்.

"பொதுமக்களுடன் சகோதரத்துவ உணர்வுடன் உறவாடுவதனால், இராணுவத்தினரும், பொலிசாரும் அவர்களின் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் பெறுவதுடன் பொது மக்களை அடக்குவதற்காக அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடப்படும் அடக்குமுறைச் சக்திகள் என்ற தவறான குற்றச்சாட்டினின்றும் அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ளவும் முடியும். இவ்வித சகோதரத்துவ உறவின் மூலம் நீதியை நிலைநாட்டும் பணியிலும் அவர்கள் அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கமுடியும்."

# செய்திச் சுருக்கம்

### பயிற்சி நிலையங்கள்

கோட்டை, செவ்வாய்

சகல உபகரணங்களும் அடங்கிய நவீன இரு விவசாய பயிற்சி நிலையங்கள் விரைவில் நிறுவப்படவுள்ளன அயர்லாந்தில் உள்ள பட்டினியிலிருந்து விடுதலை அளிக்கும் இயக்கமான "கோதா" கவுன்சில் இந்த ...

## இன்று காந்தி விழா

யாழ்ப்பாணம், புத

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழக ஆதரவில் காந்திவிழா இன்று மாலை கல்லூரி பிரார்த்தனை கூடத்தில் அதிபர் திரு ந சபாரத்தினம் தலைமையில் நடைபெறும்.

காந்தி நினைவுப் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற செல்வன்கள்: வ. கி. சிவபாலன், பொ இரகுபதி, த. நடேசலிங்கம் ஆகியோரின் பேச்சுக்களும் சத்தியசீலன் என்னும் பொருள்பற்றிய திரு, ச. அம்பிகைபாகனின் உரையும் நிகழும். காந்தி மலரும் வெளியிட்டு வைக்கப்படும்.

## பெண்ணுக்கு 6 மாதச்சிறை

சென்னை, அக். 14

வில்லிவாக்கத்தைச் சேர்ந்த பாப்பம்மாள் (வயது35 13 வீடுகளில் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்டு ஓட்டேரி குற்ற இலாகா சப் இன்ஸ்பெக்டரால் தொடரப்பட்ட வழக்கில் அப்பெண்ணுக்கு சென்னை எழும்பூர் 5-வது மாகாண மாஜிஸ்திரேட் 6 மாதக் கடுங்காவல் தண்டனைவிதித்தார்.

## ஏழைச் சிறுமிக்கு எம். ஜி. ஆர். உதவினார்

சென்னை, அக். 14

பெற்றோரை இழந்து நிராதரவான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏழைச் சிறுமியொருத்தி தனது நிலையை நடிகர் எம். ஜி இராமச்சந்திரனிடம் எடுத்துக்கூறி தன்னைச் சினிமாவில் சேர்த்து விடுமாறு கேட்ட சம்பவம் ஒன்று தேக்கடியை அடுத்துள்ள இடத்தில் நடைபெற்றுள்ளது.

எம். ஜி. இராமச்சந்திரன் அம்மணி (வயது 14) என்ற அந்தச் சிறுமியை தொடர்ந்து படிக்குமாறு கூறி அந்தப் பெண்ணின் படிப்புச் செலவுக்காக வங்கியில் 2500 ரூபாவை போட்டுள்ளார். குட்டிகானம் கன்னியர் மடத்தில் அச் சிறுமி படிப்பதற்கு எம். ஜி. ஆர் ...

# ஐயாறன் எழுதுவது

இது நவராத்திரி காலம். முந்தாநாள் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலே செல்வி நளாயினியின் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்கு ஏராளமான 'பராசக்திகள்' விதவிதமான ஆடை அணிகள் அணிந்து வந்து பார்த்து, ரஸித்து ஆசீர்வதித்தார்கள். அந்த அழகான கண்கொள்ளாக்காட்சி ஏதோ பெரிய கல்யாணம் அங்கு நடப்பதுபோல் இருந்தது.

பல வருடங்களுக்கு முன் தாயை இழந்த செல்வி நளாயினி செல்வராசாவுக்கு கலாதேவியே தாயாக இருந்து அந்த அருங்கலையைக் கற்பித்து வளர்த்திருக்கின்றார். இப்பெண்மணிக்கு பரதநாட்டியக்கலைக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் பொருந்தியுள்ளன. மான்குட்டிபோல் துள்ளித் துள்ளி ஆடுவதற்கேற்ற உடல் அமைப்பு. பாவம், ராகம், தாளம் இம்மூன்றும் அமைந்து, ஈழத்துக் கலை உலகிலே அழகிய ஒரு புதிய நட்சத்திரம் உதயமாகியது போல் தோன்றியது. அவருக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறதென்பதில் ஐயமில்லை. இவ்விதக் கலை நட்சத்திரங்களின் பெற்றோர்களுக்கு சீதனப் பிரச்னைகள் இராதென்றே நம்புகிறேன்.

0 0 0

இப்பெண்மணிக்குப் பயிற்சி அளித்து அரங்கேற்றிய யாழ்ப்பாண கலாமன்றத்தாரையும், சிறப்பாக செல்வி திரு குமாரசாமியையும் பாராட்ட வேண்டும். இம்மன்றத்திலே பயின்று அரங்கேறியவர்களில் இவர் எட்டாவது கலைஞராம். பரதமாடும் பெண்களுக்கு பெண்களே நட்டுவாங்கம் செய்து பின்னணியிலும் பாடுவது மிகப் பொருத்தமாகவும் இனிமையாகவுமுள்ளது. அரசாங்கத்தின் உதவி ஏதும் கிடைக்கிறதா? என்று விசாரித்ததில் எதுவுமில்லை என்றும் அம்மன்றத்தைச் சேர்ந்த ஒரன்பர் தெரிவித்தார். பொதுமக்களின் ஆதரவு அவர்களுக்கு அமோகமாக இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தலைமைவகித்த கனகநாயகமவர்கள், யாழ்ப்பாணம் "கலாசார பாலைவனம்" அல்லவென்றும், இங்குள்ள கலைஞர்கள், தமிழகக் கலைஞருக்கு எவ்வகையும் தாழ்ந்தவரல்லர் என் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோங்கிவந்திருக்கிறது என்ருலும் பனையைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவும் மக்களின் உணவுத் தேவையையும் மற்றும் தேவைகளையும் நிறைவேற்றவும் தமிழ்நாடு முயற்சிசெய்து முன்னேற்றமும் கண்டிருக்கிறது. பனைச் செல்வத்தை மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்படச்செய்வதில் அரசாங்கங்களை விட காந்தீய சேவா சங்கமே பெரிதும் உதவிபுரிந்துவருகிறது.

தெங்குப் பொருள் ஆராய்ச்சி நிலையம், ரப்பர் ஆராய்ச்சி நிலையம் இருப்பது போன்று வட இலங்கையில் அனுப்பினுல் என்ன?

மரம் நாட்டு விழா ஆண்டு தோறும் நடைபெறுகிறது. குடியேற்றத்திட்டங்களை உருவாக்கும் போது மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்படுவதால் மழை பொய்த்து விடுகிறதென்று விஷயம் தெரிந்தவர்கள் சொல்லுகிருர்கள் இதற்காகவே மரம் நாட்டு விழாவும் நடைபெறுகிறது. பயனுள்ள மரங்கள் நாட்டப்படவேண்டும். மரங்களில் முழுக்க முழுக்கப்பயன் தரக்கூடியது பனை. எனவே ஆண்டுதோறுமல்ல மாதந்தோறும் பனைமகோற்சவத்தைக் கொண்டாடினுல் என்ன?

# பராசக்தி

-சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி-

இராகம்: பெகாக் தாளம்: ஆதி

அரனிடப் பாகங் கொண்டாள்
அரியமர் துர்க்கை யாளுள்
திருவெனும் பேரைத் தாங்கித்
திரவியம் ஈந்து நிற்பாள்
கரத்தினில் வீணை தாங்கிக்
கலைதர வாணி யாளுள்
அருமறைப் பொரு ளாளுள்
அன்னை பரா சக்தியே.

உதித்திடுங் கதிரொ ளிபோல்
உயர்ந்தவாழ்க் கைத ருவாள்
எதிர்த்தே வரும்துன் பங்கள்
எமையணு காது செய்வாள்
துதித்திடும் போது தூய
தரிசனங் காட்டி நிற்பாள்
பதித்திடில் மனத்த வளைப்
பவப்பிணி யேஇ லையே

★

# வாணிபதம் போற்றுவோம்

—திமிலைக்கண்ணன்—

பல்லவி

வாணி பதம் போற்றுவோம் —இந்த
வையம் புகழும்கலை வாழ்வளிக்கும் ஞான- (வாணி)

அனுபல்லவி

வீணைகரத் தேந்தி வித்தக ஏடேந்தி
வெள்ளைக் கமலமிசை வீற்றிருக்கும் கலை-(வாணி)

சரணங்கள்

எண்ணும் எழுத்தும் இயலும் இலக்கியமும்
பண்ணும் பரதமும் பாட்டும் அதன் பொருளும்
நண்ணும் கலையாவும் நல்கும் கலைமகளை
கண்ணும் கருத்தும் கையும் தொழுதேற்ற-(வாணி)
உந்திக் கமலத் துறைகின்ற வித்தகியை
சிந்தையால் வாக்கால் செயலால் விவேகத்தால்;
வந்தனை செய்து வழிபட்டு நாம் எழுப்பில்
தந்தருள் வாள்ஞானம் சரண் புகுந்து நாம் நிதமும்
-(வாணி)

## 'என்னை விலக்க முடியாது'

சென்னை, அக். 14

"அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்து என்னை விலக்கமுடியாது. காரியக் கமிட்டி உறுப்பினராக நான் நீடிந்திருப்பதற்கு தடை விதிக்கக்கூடியதாக காங்கிரஸ் விதிகளில் எதுவுமில்லை" என்று தமிழ்நாடு முன்னுள் காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

அல்லைப்பிட்டி, செவ்வாய்

சரவணையைச் சேர்ந்த ஆறுமுகம் கதிர்காமநாதன் என்னும் இருபத்தெட்டு வயது திருமணமாகாதவாலிபர் வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்தி காரணமாக நச்சுத் திராவகம்அருந்திதற்கொலை செய்து கொண்டார். இவரது மரணம் சம்பந்தமாக வேலணைப் பகுதிதிடீர்மரண விசாரணை அதிகாரி மகாலிங்கம் விசாரணை நடாத்தினர். தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னுர்.

திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"முத்தமிழ்க் கலைக்கு ஒரு மேலான ஸ்தானத்தை எமது மக்கள் அளித்து கலைஞரைக் கௌரவிக்கவேண்டியது மேலான கடமை. பண்டைக் காலத்தில் மன்னரால் வளர்த்துவரப்பட்ட தமிழ்க் கலை, கலாச்சாரங்கள் இன்று மக்களின் கைக்கு மாறியிருக்கின்றன. இதனுல் மக்கள் தமது மா பெரும் பொறுப்பை உணர்ந்து கலைஞரை ஆதரிக்கவேண்டும்

தொழிலாளர் தமக்குப் புதிய தெம்பு ஊட்ட, கலைகளைக் கேட்டு இன்பம் அடைகின்றனர். மேலைநாடுகளில்

## ...பஸ்வேணடாம்'

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திற்கும் கொடிகாமத்திற்கும், இனிமேல் புதிதாக இரட்டைத் தட்டு பஸ்களை சேவையிலீடுபடுத்தவேண்டாமென்று தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கம், இலங்கைப் போக்குவரத்துச்சபை வடபிராந்திய முகாமையாளரை கேட்கவிருக்கிறது. இரட்டை தட்டு பஸ்ஸிற்கு பதிலாக ஒற்றைத்தட்டு பஸ்களை சேவைக்கு விடுவதால் பிரயாணிகள் விரைவாக செல்ல முடியும் என சங்க உறுப்பினர் ஒருவர்தெரிவித்தார்.

# "கட்டடா என்றுகந்தசாமியின் சப்தமும் அடிவிழும் சப்தமும் கேட்டன"

## மந்துவில் கி. ச. காவலாளி கொலை வழக்கில் சாட்சியம்

மட்டுவில், செவ்வாய்

"ஐயோ, ஐயோ என்று குளறும் சத்தமும், அதையடுத்து, அடிவிழும் சத்தமும்கேட்டது. நாங்கள் டோர்ச்லைட்டை அடித்துக் கொண்டுஓடிப்போய் மேற்கு வேலியில் நின்று பார்த்தோம். அங்குபோனபோது, முதலாம் எதிரி கந்தசாமி 'கட்டடா' என்று சொல்லும் சத்தமும் அதையடுத்துப் பின்னும் அடிவிழும் சத்தமும்கேட்டது" என தாவளை கிராம சபைக் காவலாளி செல்லத்துரை கொலை வழக்கில் சின்னத்தம்பி வீரகத்தி சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

மந்துவில் தாவளையைச் சேர்ந்த கிராம சபைக் காவலாளியான சிவகுரு செல்லத்துரை என்ற வாலிபரைக் கொலைசெய்த வழக்கு, நேற்றுக்காலைசாவகச்சேரிமாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் அதே ஊரைச் சேர்ந்த சின்னையா கந்தசாமி, ரி. சிவகுரு ஆகிய இருவரையும், சாவகச்சேரிப் பொலிசார் சந்தேகத்தின் பேரில்கைதுசெய்திருந்தனர் விசாரணையின்போது, எதிரிகள் தரப்பில், வழக்கறிஞர் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. ஸி. தனபாலசிங்கம் ஆஜராளுர். முடிக்குரிய தரப்பில் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கு. துரைசிங்கம் வழக்கை நடத்தினுர். விசாரணையின்போது சாட்சி தொடர்ந்து கூறியதாவது:

"எனக்கு இறந்த செல்லத்துரையை தெரியும், முதலாம் எதிரி கந்தசாமியையும் தெரியும். இரண்டாம் எதிரியைத் தெரியாது கடந்த ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி இரவு நான் என்னுடைய வளவிற்குள் நின்றேன். அப்பொழுது கோவிந்தர் சின்னத்தம்பியும் என்னுடன் இருந்தார். நாங்கள் இருவரும் ஏதோ வண்டில் மாடு பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். எனது வீட்டிற்கும், முதலாம் எதிரி கந்தசாமியின் வீட்டிற்குமிடையில் சுமார் கால் மைல் தூரம் தான் இருக்கும்.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தான் மேற் சொன்ன சம்பவம் நடந்தது நான்லைட்டை அடித்தபோது முதலாம் எதிரி 'யாரடா அது லைட்டடிக்கிறது என்று தகாத வார்த்தைகளால் ஏசினுர். உடனே நாங்கள் திரும்பி சங்கக்கடை மனேச்சர் வேலாயுதர் வீட்டிற்குப் போனேம் அவரையும் என்னுடன் வரும்படி நான் கேட்டேன்.

நான் அப்படிக் கேட்டதும் நேரம் இரவு 11—11-30 மணி ஆகிவிட்டதென்றும், இதன் பின் ஒருவரின் வீட்டிற்குள் போவது சரியில்லை என்றும் சொல்லி மறுத்து விட்டார். அப்பொழுது கந்தர் செல்லரும் அங்கு வந்தார். உடனே நான் அவரிடம் 'செல்லத்துரையைக் கட்டிப்போட்டு அடிவிழுகுது கிராம சேவையாளரிடம் போய்ச்சொல்லு' என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்குப் போனேன். அடுத்த நாள் இரவு பொலிசார் என்னை முறைப்பாடுகேட்டுப் பதிந்துகொண்டார்கள் என்ருர்.

அடுத்து வேதவனம் முத்தையா ஆகியோரின் சாட்சியங்களையும் விசாரணை செய்த மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை இம்மாதம் 26ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

சக்திகள் என்ற தவருன குற்றச்சாட்டினின்றும் அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ளவும் முடியும். இவ்வித சகோதரத்துவ உறவின் மூலம் நீதியை நிலைநாட்டும் பணியிலும் அவர்கள் அரசாங்கத்திற்கு உதவியாக இருக்கமுடியும்."

உடுப்பிட்டி எம்.பியும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரம் நேற்று முன்தினம் சுடர்ஒளி விளையாட்டுக்கழக ஆதரவின் கீழ் பருத்தித்துறை பொலிஸ் கோஷ்டிக்கும், பலாலி இராணுவக் கோஷ்டிக்குமிடையில்நடந்தகைப்பந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து மேற்கண்டவாறு கூறினுர்.

தலைமை தாங்கிய வரணி மகா வித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா கூறியதாவது: "காந்தி நூற்ருண்டு விழா எடுக்கப்படும் இன்றைய காலகட்டத்தில், விளையாட்டின் மூலம் சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய ஜனநாயகக்கோட்பாடுகளை நிலைநாட்டலாம். விளையாட்டுகளை பாடசாலையுடன் நிறுத்திவிடாது, தொடர்ந்து மேனுட்டவரைப்போலவாழ்வின்ஒரு பகுதியாகக்கொண்டால் ஒரு பலம் பொருந்திய இனத்தை உருவாக்கலாம்".

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. பீ. ஜெயகாந்தன் திருவாளர்கள் ஏ. டீ. பி. ஜேசுதாசன், கே. கார்த்திகேசு, எஸ். கதிர்காமத்தம்பி, பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிளைவ் பெர்னுந்து, பண்டிதர் வீ. பரந்தாமன் ஆகியோரும் பேசினர்.

# அண்ணு வரலாற்றை உண்டாக்கியவர்

— எம். ஜி. ஆர்.

திருவண்ணுமலை, அக் 14

"அண்ணு ஒருவரைத் தான் மனிதன், மனிதருள் தெய்வமாக மதித்தான் உலகத்தில் அண்ணுவைத் தவிர வேறெவரும் இந்த இடத்தை அடையவில்லை" திருவண்ணுமலையில் நடைபெற்ற அண்ணு சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு நடிகர் எம் ஜி இராமச்சந்திரன் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்

'அண்ணு ஒரு சிறந்த நடிகர் எழுத்தாளர், பேச்சாளர், ஒப்பற்ற அரசியல்வாதி அண்ணு விட்டுச் சென்ற சேவைகளை அவர் வழித் தோன்றிய கருணுநிதி செய்து வருகிருர் அண்ணு ஒரு வரலாற்றை உண்டாக்கியவர்" என்று திரு இராமச்சந்திரன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்

கோட்டை, செவ்வாய்

சகல உபகரணங்களும் அடங்கிய நவீன இரு விவசாய பயிற்சி நிலையங்கள் விரைவில் நிறுவப்படவுள்ளன அயர்லாந்தில் உள்ள பட்டினியிலிருந்து விடுதலை அளிக்கும் இயக்கமான "கோதா" கவுன்சில் இந்த இரு பயிற்சி நிலையங்களையும் நிறுவ முன்வந்துள்ளது

0 0 0

## தடைப்பட்டது

கோட்டை, செவ்வாய்

கடந்த இரு தினங்களாக தொடர்ந்து மழை பெய்ததினுல் கொழும்புப் பகுதியில் பல இடங்களில் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன களனிகங்கையில் நீர்மட்டம் 1 அங்குலம் அதிகரித்துள்ளது.

0 0 0

## 500 காளைகள் இறக்குமதியாகும்

கோட்டை, செவ்வாய்

பஞ்சாப்பிலிருந்து 500 காளை மாடுகளை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது

0 0 0

## தொலைபேசி வசதி இல்லை

மன்னுர் மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு உபதபால் கந்தோருக்கு இதுவரை தொலைபேசி வசதி இல்லாதிருப்பது குறித்து இப்பகுதி மக்களிடையே அதிருப்தி நிலவுகிறது ——

## யாழ்ப்பாணத்துக்கே ...

3-ம் பக்கத் தொடர்ச்சி

திற்கே உரித்தாகும் சுவாமி யாழ்ப்பாணத்திலே இருந்த காலத்தில்தான் இராமகிருஷ்ணமடத் தலைவரின் தொடர்பு ஏற்பட்டது. யாழ்ப் பாணத்திலிருந்தே துறவியாக போவதற்குதிட சங்கற்பம் செய்தார். துறவியானுர்.

இராமகிருஷ்ண மடத்திலிருந்து இலங்கை திரும்பிய சுவாமி விபுலாநந்தர் யாழ்ப்பாணத்திலே தான் முதன் முதல் மிஷன் பாடசாலையை அமைத்தார் பின்பு திருக்கோணமலையில் அமைத்தார். மீண்டும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று பேராசிரியராக சேவை செய்து திரும்பிய பின்பே மட்டக்களப்புபகுதியில் பல பாடசாலைகளையும் அமைத்து கிழக்கு மாகாண மக்களுக்குசேவைசெய்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

எம். ஜி. இராமச்சந்திரன் அம்மணி (வயது 14) என்ற அந்தச் சிறுமியை தொடர்ந்து படிக்குமாறு கூறி அந்தப் பெண்ணின் படிப்புச் செலவுக்காக வங்கியில் 2500 ரூபாவை போட்டுள்ளார். குட்டிகானம் கன்னியர் மடத்தில் அச் சிறுமி படிப்பதற்கு எம்.ஜி ஆர் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். ——

## சர்க்கஸ் வீரர் பரிதாப மரணம்

சேலம் அக்.14

சர்க்கர்ஸில் பார் விளையாடும்போது 100 அடி உயரத்திலிருந்து விழுந்து வீரர்ஒருவர் மரணமானுர். இப்பரிதாபசம்பவம் சேலத்தில் நடைபெற்றது.

சர்க்கர்ஸில் முதல் முறையாகப்பார் ஆடும் காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மரணமான மணி (வயது 25) கீழே விழுந்ததால் தலையின் பின்புறம் பலத்த காயம் ஏற்பட்டது. இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர், ......

## குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கத்தை நிறுத்துக

மொரட்டுவ, செய்வாய்

சௌக்கிய இலாகா குடும்பக்கட்டுப்பாடு மாத்திரைகளை இம்மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் தாய்மார்களுக்கு விநியோகிப்பதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கத்தை நிறுத்தவேண்டுமெனவும் சுகாதார அமைச்சரைக் கோருகிறது.

தெகிவளைகல்கிசைமாநகர சபை அங்கத்தவர் திரு. ஐ. சி. பெரேரா சபையின் மதாந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மேலும் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் சிங்களத் தாய்மார்கள் மத்தியில் தீவிரமாக இவ்வியக்கம் பிரச்சாரம் செய்கிறதெனவும் இது தாய்மார்கள் பிறக்கவிருக்கும் தங்கள் குழந்தைகளைக் கொலைசெய்வதாகும் எனவும் குறிப்பிட்டார்.

இம்மாநகரசபையின் மற்றுமொரு அங்கத்தவரான திரு அன்ட்றூபெர்னுன்டோ மேற்படி தீர்மானம் குறித்துப் பேசுகையில் குடும்பக்கட்டுப்பாடுமாத்திரைகளைத் தயாரித்து சிபார்சு செய்து அனுப்பும் அமெரிக்கர்கள் இதனுல் சிங்கள ஜனத்தொகையைக் குறைக்கப் பார்க்கிருர்கள் எனக் குறிப்பிட்டார்.

மாநகரசபை மேயர் திரு. எஸ். வி குணவர்த்ன மற்படி தீர்மானத்தை அப்பகுதி ஆட்சிமன்ற அங்கத்தவரைக் கொண்டு செயல்படுத்துவதாகத் தெரிவித்தார்.

ளின் ஆதரவு அவர்களுக்கு அமோகமாக இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

தலைமை வகித்த கனகநாயகமவர்கள், யாழ்ப்பாணம் "கலாசார பாலைவனம்" அல்லவென்றும், இங்குள்ள கலைஞர்கள், தமிழகக் கலைஞருக்கு எவ்வகையிலும் தாழ்ந்தவரல்லர் என்றும் சரியாகக் குறிப்பிட்டார். இம்மன்றம் இதுவரை அரங்கேற்றிய எட்டுப் பேரையும் சென்னையிலே டிசம்பர் சீசனில் அழைத்துச் சென்று கலைக் படையெடுப்பு நடத்தினுல் ஈழத்துக்கு வெற்றி நிச்சயமென்று உறுதியாகக் கூறலாம்

ஒருவிஷயம். பரதநாட்டியத்திலே சிருங்கார ரஸமான பழைய பாடல்களையே அதிகம் பாடி, ஆடுகின்றனர். சிலசமயம் இது சலிப்புத் தட்டுகிறது. தெய்வத்தின் திருவிளையாடல்களையும் எப்படி நமக்கு அருள் செய்கிருர் என்பதையும் விளக்கும் புதுப்புதுப் பாடல்களுக்கு பரதமாடி தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதுடன், சமூகக் குறைகளைத் தீர்க்க வழிகாட்டும் முறையிலும் புதிய கற்பனைகளைச் செய்ய எவ்வளவோ இடமுண்டு. அன்பர் வீரமணி போன்ற கலைஞர்களை ஈன்றெடுத்துள்ள ஈழ அன்னை, தமிழகத்துக்கும் இவ்வகையில் இனி வழிகாட்டுமென்று நம்புவது மிகையல்ல,

0 0 0

ஆவி உலகத்தைப்பற்றி தொடர்ந்து எழுத வேண்டுமென்று கேட்டுள்ள கரவெட்டியைச் சேர்ந்த ஓர் அன்பர், செல்வி வித்தகத்தின் தந்தையாரின் பெயரையும் விலாசத்தையும் தெரிவிக்குமாறு கேட்கின்ருர்.

தந்தையாரின் பெயர் திரு. க. மாணிக்கவாசகம் பிள்ளை. விலாசம் லோகநாயகி மைன்ஸ், மீரிகமை

0 0 0

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும், பாடல் பயின்ற பல்பூதம் பல்லாயிரங் கொள் கருவி, நாடற்கரியதோர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து, ஒடுங்கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை.

— அப்பர் அடிகள்

## சிரமதானம்

சங்கானை, செவ்வாய்

பண்டைத்தரிப்பு-சில்லாலை உந்துவத்தை ருேட்டில் இருக்கும் மதகு, பட்டின சபைத் தலைவர் திரு எஸ் செல்வரத்தினம் தலைமையில் சிரமதான மூலம் விசாலமாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org